[illegible]

ஆண்டு 6 சுடர் - 4

[illegible] 1932

SL
[illegible]211, [illegible]27 SN
[illegible]32·6·4
18694

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR O
16 FEB 1934
MADRAS

# சிவநேசன்

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு சு. § ஆங்கீரச-கார்த்திகை 1932-நவம்பர் § திங்கள் ச.

| உள்ளுறை. | | பக்கம். |
|---|---|---|
| க. | திருக்கோயிலும் தீண்டாதாரும். | 121 |
| உ. | "செட்டிநாடு" | 125 |
| ங. | ஹரிஜனங்களும் ஆலயங்களும் | 126 |
| ச. | வரவேற்பு (முற்றொடர்ச்சி) | 129 |
| ரு. | நீதிமொழிகள். | 136 |
| சு. | அறிவியல், அழகியல், அன்பியல். | 137 |
| எ. | முத்தமிழ் முறை. | 145 |
| அ. | கரிகாற்சோழன் | 152 |
| கூ. | ஆலயப் பிரவேசம். | 153 |
| கo. | தீண்டாதாரும் செட்டிப்பிள்ளைகளும். | 158 |
| கக. | ஆப்தவாக்கியங்கள் | 160 |
| கஉ. | சங்கரலிங்க உலா. | |

ஆசிரியர் ர்ம. த. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

சென்னை பதிவு எண் 2302.

# செய்தித் திரட்டு.

**உள்ளூர்:—** ஐப்பசி க, கூ-ம் தேதிகளில் சந்திரசேகரர் தேனாற்றுக் கெழுந்தருளித் தீர்த்தங் கொடுத்தருளினர். சிவநேசநிலயத் தருமக் கட்டடத்தின் வீதிவழியாகச் சுவாமி வரலாயினர். சிவாலயத்தின் தென்பாலுள்ள கால்வாய்க்குப் புதிய பாலங்கட்டி முடிந்ததே இக்கலத்திற் கேதுவாயிற்று. வழக்கம்போல் சிவாலயத்தில் துலாப் புராணம் படிக்கப்பெற்றது.

**பள்ளத்தூர்:—** திருவாளர் உ. அ. பெரி. மு. அவர்களுக்கும் தாமஸ்கூக் கம்பெனியாருக்கும் பிரிவி கௌன்ஸிலில் நடைபெற்ற வழக்கு, உ. அ. பெரி. மு. வுக்குச் சாதகமாக முடிவுற்றதாய்த் தெரிகிறது.

**ஆவினிப்பட்டி:—** விவேகானந்தர் கல்விக்கழகத்தின் ஆறாம் ஆண்டு ஐந்தாம் மாதக்கூட்டம், 10-11-32 மாலை கண்டவராயன்பட்டி திரு. முரு. சொக்கலிங்கஞ் செட்டியார் தலைமையில் நன்கு நடைபெற்றது.

**கோர்ட் வழக்குகள்:—** கானாடுகாத்தான் திருவாளர் சா. ராம. அரு. இராமநாதன் செட்டியார் தேவகோட்டை சப்கோர்ட் 1930-ம்வருடத்திய 1091நம்பரில் தொடுத்த வழக்கு, பிரதமஜட்ஜ் திருஷ்ணக் குறுப்பு என்பவரால் தள்ளப்பட்டு, கனம் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியா ரவர்கட்குச் சாதகமாயிற்று.

**பாரிஸ்டர்:—** கோட்டையூர் திருவாளர் க. வீ. அள. ராம. அளகப்ப செட்டியார் இங்கிலாந்தில் பாரிஸ்டர்பரீக்ஷையில் தேறியுள்ளார்.

**கந்தர்சஷ்டி:—** ஐப்பசி மாதத்தில் குன்றக்குடி, திருவாவினன்குடி, திருச்சிக்கல், திருத்தென்குடித் திட்டை, கீழச்சிவபுரி ஆதிய திருத்தலங்களிலெல்லாம் மிகச்சிறப்பாக நிறைவேறின.

**சம்பாசஷ்டி:—** நகர வைரவன் கோவிலில் இம்மதி ௰கூ-ல் காப்புக்கட்டி, ௰அ-ல் சூரசம்மாரமும், அடுத்தநாட்களில் தீர்த்தவாரி முதலியனவும் மிகச்சிறப்பாக நடைபெறும்.

**மணிவாசக ஞானசம்பந்த சபை:—** செல்வர் வாழும் திருநெல்வேலி மாநகரத்தில் ஐப்பசிமீ ஸ்ரீ நெல்லையப்பர் காந்திமதியம்மை திருக்கலியாணத் திருவிழாவிலும், ஷை ஆலயத்தில் ஸ்ரீ ஆறுமுக நயினார் சந்நிதியில் கந்தஷஷ்டி திருவிழாவிலும் ஷை மணிவாசக ஞானசம்பந்த சபையின்கண் தக்க வித்வான்களால் அரிய பெரிய உபந்நியாசங்கள் சிறப்புற நடைபெற்றன.

**அண்ணாமலை சர்வகலாசாலை:—** இரண்டாவது பட்டமளிப்புவிழா, 27—10—32ல், சென்னை கவர்னர் தலைமையில் நடைபெற்றது. பட்டம் பெற்றவர் ஐம்பத்துமூவர். கல்வி இலாகா தலைவர் விட்டில் ஹெயில்ஸ் பட்டதாரிகளுக்கு ஒரு சொற்பொழிவாற்றினர்.

**திருவாளர்களான:—** சிவராம சேதுப் பிள்ளை, எஸ். சத்தியமூர்த்தி, த. வே. உமாமகேசுவரம் பிள்ளை ஆகிய மூவரும் ஆலோசனை சபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

OFFICE … MADRAS
16 FEB 193[illegible]

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு சு } பலவான்குடி-ஆங்கீரச–கார்த்திகை { திங்கள் ச.

உடையா னுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## திருக்கோயிலும் தீண்டாதாரும்.

திருக்கோயில் என வழங்குவது சைவ வைணவ ஆலயங்களே யாகும். அவைகள் வேத ஆகம விதிமுறையால் நிர்மாணித்து, திருவுருவங்களும் மந்திரபூர்வமாக பிரதிட்டை செய்து, நித்திய நைமித்திய ஆராதன வழிபாடுகளும் செய்யப்பெறுகின்றன. வேதாகமமாகிய முதனூல்கள் செத்துப் பிறக்குஞ் சீவர்களால் ஆக்கப்பட்டன அன்று. இறைவர் அருளியதென்பது சித்தாந்தம்.

"வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன் நூல்"

என்பதாதிய பிரமாணங்கள் பலவுள. வேதாகமங்களை உடன்பாடாகக்கொண்டு வழிபடுதலே உண்மை வழிபாடாகும். அங்ஙனம் உடன்பாடுகொண்டே கணிக்கமுடியாத காலந்தொட்டு நடைபெற்றுவருகின்றது. மொகலாய அரசர் காலத்தில் கத்திமுனையில் உயிரை யிழப்பதானாலும், சமயப் பற்றை இழக்கச் சம்மதியாது இறுகப் பற்றி யுறுதிகொ[illegible] நம் முன்னோர்களின் அதி தீவிர பக்தியையும் [illegible] சிந்திப்பவர்க்கு,

18694
[illegible] 2·6[illegible]

உயிர்க்கு உறுதி பெண்டு பிள்ளை பண்ட பதார்த்தங்களோடு கூடி வாழும் இவ்வுலக சாம்ராஜ்யம் அன்றென்பதும், நித்தியமாகிய வாழ்வைத் தரும் முத்தியின்பமே என்பதும், அதனைச் சமய நெறி நின்றே பெறக்கூடும் என்பதும் தெள்ளிதிற் புலனாகும். வேதாகமங்கள் சமயநெறியை விளக்குமிடத்து, “தெய்வத் துரோகிகளைச் சிரச்சேதஞ் செய்; இயலாதேல், அவர்மேற் பழிசுமத்தி உயிரை விடு; அதற்குந் துணிவின்றேல் அத் துரோகிகள் வதியும் ஊரை விட்டுத் தூரப்போ. இவற்றுள் யாதானும் செய்யாவிடில் தெய்வத் துரோகம் சித்திக்கும்.” எனக் கட்டளையிடுகின்றன. அரசன் ஆணை மீறினோர் தண்டிக்கப்படுதல் போலவே, கடவுளாணையை மீறினோரும் தண்டத்துக் குள்ளாவர் என்பது ஒருதலை யாதலின், இறைவன் கட்டளையிட்டருளிய மறையாகமங்களுக்கு மாறுபாடில்லாமலே, அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் ஆகிய நான்கு வகுப்பினரும் அவ் வகுப்புக்களின் உட்பிரிவினரும் தத்தமக்கு வகுத்த எல்லைகளில் நின்றே திருக்கோயில் வழிபாடு செய்துவருகின்றனர். இவர்களிலெல்லாம் முதன்மைத் தானம் அருச்சகருக்கே யாகும். அவ் வருச்சகரன்றி திருவுருவத் திருமேனியைப் பிறரெவருந் தீண்டினாற் பிராயச்சித்தம் வேண்டப்படும்.

இங்ஙனமாக வரம்புக்கு உட்பட்டு நடைபெறுகின்ற திருக்கோயில்களினுள்ளே தீண்டாதார்களை நுழையவிட வேண்டுமென்பது, கிரமமா? அக்கிரமமா? என அறிவுடையோர் தெளியற்பாலதே. தீண்டாதார் என்பதின் பொருள்தான் என்ன? புலை கொலை யாதியவற்றைப் பரம்பரைக் குலவொழுக்கமாகக் கொண்டிருத்தலா லன்றோ சண்டாளத்துவஞ் சித்தித்துத் தீண்டப்படாதா ராயினர். இவர்களை மேனிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்றால், அவர்களின் தீய பழக்கவழக்கஒழுக்கங்களை நாளடைவில் ஒழிக்கும்படி அவர்களுக்கு நல்லறிவுபுகட்டி புனிதர்களாக்கப் பாடுபடாமல், திடீரென்று திருக்கோயில்களுள் நுழைய விடவேண்டும், இன்றேல் உயிரை மாய்த்துக்கொள்வேன் என்பவர்தானா மகாத்மா? நன்று! நன்று!! தன் வாழ்நாள் முழுதும் படாத பாடெல்லாம் பட்டும் ஒரு காரியமும் சித்திக்காமல், தளர்ந்த நிலையில் ஏழைகளின் பொருட்டுப் பிராணத் தியாகம் செய்துகொண்[illegible]ாகப் போலிப் புகழை விரும்பினர் போலும். தீ[illegible] ஆலயப் பிரவேசஞ்



செய்ய இயலாத குறையை நிவர்த்திக்க வேண்டினார்? எதற்காக இந்தச் சமயத்தில் இக் கிளர்ச்சி செய்யப்பட்டது? மனிதர்களாலேயே தீண்டப்படாதவர்கள் திருக்கோயில்களில் எப்படிப் பிரவேசிக்க முடியும்? தீண்டாதார்கள் தங்களுக்குரிய முறையில் ஆலயங்க ளமைத்து வழிபாடுகள் செய்துகொண்டுதானே இருக்கிறார்கள். சும்மா சுகித்திருக்கின்ற அவர்களைக் கலகத்திற் புகுத்துவது காந்தியின் பிறவிக் குணத்தையே காட்டுகின்றது.

இதுபோது தீண்டாதார்களுக்குத் தலைவராக உள்ள அறிவாளிகளில் எவராவது இக் கிளர்ச்சியைத் தங்களுக்குச் சாதகமென ஏற்றுக்கொள்ளுகிறார்களா? இல்லையே. இது விஷயத்தில் பரிபவப்படுகின்ற மேதாவிகள் முதலில் திருக்கோயில் நுழைவிற்முன் பரீக்ஷை பார்க்கவேண்டுமா? தங்களுடன் உறவுகலந்து சாதிபேதங்களை யறவே ஒழித்து, தீண்டாமையைப் போக்கிவிடவோ, தீண்டாதாராகிவிடவோ செய்வதல்லவா, அக் கட்சிக்கு அடிப்பட்ட அரணாகும். காந்தி சொல்வது வேதமா? கடவுளருளியது வேதமா? என்பதுதான் ஆராயவேண்டும்.

கடவுளருளிய வேதவரம்புக் குட்பட்டு, கருணையாளனாக இருந்த சிபிச் சக்கரவர்த்தி ஒரு புறாவின் உயிரைக் காப்பாற்ற தன் உடலை அரிந்து கொடுத்த பெருமை பொருந்திய இப் பரதகண்டத்தில்—ஒரு பச்சிளம் பசுங்கன்று தேர்க்காலிற் பட்டிறந்தது கேட்டு, அத்தேரூர்ந்த தன்னொரு மகனை ஆரூர் வீதியிற் றேர்க்காலிற் படுத்து மநுமுறை கண்ட அரசர்கள் வதிந்த இப்புண்ணிய பூமியில், ஒரு பசுங்கன்று படுந்துயர்கண்டு வருந்தி, அதன் வருத்தந் தவிர்க்க வழிதேடாமல் தெய்வாதீனமாக ஒருகால் பிழைத்துக் கொள்ளும் என்ற சிந்தனையுமில்லாமல் அதனை விஷவூசி யேற்றிக் கொன்று மகாபாதக மேற்கொண்டவரை மகாத்மா என்றும், அவதார புருஷர் என்றும், உலகை உய்விக்க வந்தவரென்றும், வானளாவப் புகழ்ந்து கொண்டாடினால், அவர் தன் கட்டளையே வேதவாக்கென்று கருதவேண்டியதுதானே. தான் சொல்வதே வேதவாக்காகக் கொள்ள வேண்டு மென்பவர் ஆஸ்திக ராவாரா? இவர் இருக்கும் ஊரிலாவது, சுற்றுப் பிரயாணங்களிலாவது, நியமமாக ஆலய வழிபாடு செய்ததுண்டா? வேதாகமங்களை, அவைகளின்

கருத்துக்களை ஒரு சிறிதேனும் அறிவாரா? பகவற்கீதை சாதி ஆசாரங்களைத் தழுவக் கட்டளை யிடுகின்றதா? நழுவவிடச் சொல்லுகின்றதா? தீண்டாமையை யொழிக்க இவர் கொண்ட ஆதாரமென்ன? பட்டினி கிடந்து உயிர்விடுவேனென்று பயமுறுத்திப் பலாத்காரம் செய்வதைப் பார்க்கிலும், ஏழைகளிடத்து உண்மை இரக்கமிருப்பின் நாடுதுறந்து, காடுசேர்ந்து இறைவனைக் குறித்து தவங்கிடந்தால், அத்தவத்தின் பயனால் அவ்வேழைகளை நன்னிலையுறச் செயலாமே. திருக்கோயில்களைக் குச்சுக்காரிகள் வீடென்று கூசாமற் சொன்ன இவரது தீய நாவினால் கூறுவதா வேதவாக்கு? திருக்கோயில்களை ஒருசிறிதும் மதியாது ஊற்றை வாய்கொண்டுளறிய இவருக்கும் திருக்கோயில்களுக்குஞ்சம்பந்தம் எள்ளளவேனும் உண்டா? திருக்கோயில் இழிவுகூறிக் கண்டபலன் தண்டனையன்றிவேறென்னை? அவர் காலக்கிரமத்தில் சீவ இயற்கைப்படி தேகத்தை விடவேண்டியவரே. அவ்வநித்திய தேகம் அழிந்து போவதற்குப் பரிபவப்பட்டு, இறைவன் திருவாக்குக்கு மாறாக எந்த வைதீகர்களும் இவர் கூற்றுக்கு உடன்பட மாட்டார்கள். பலாத்காரமாகப் பிரவேசிக்கச் செய்யினும், அதனால் விளைவது கலகமேயன்றி, பலன் யாதுங் காணமுடியாது:

உலகத்தில் உயர்வுதாழ்வில்லாத நிலயங்களை எங்கேனும் காணமுடியுமா? சட்டசபை முதலான பொது ஸ்தாபனங்களிலும், இராஜசபைகளிலும், நீதி மன்றங்களிலும், பிறவிடங்களிலும் எல்லாரும் ஒரு நிகராக இருக்கவோ, ஊதியம் பெறவோ செய்கின்றார்களா? தாழ்ந்த சாதியாராயினும் இறைவன் சன்னிதானத்தில் பேதமின்றி அடையக்கூடாதா எனின், ஆண்டும் பக்குவத்துக்குத் தகுந்த பதவிகளை வகுக்கப் பெற்றுள்ளன.

சாதாரண கற்களும் நவரத்னக் கற்களும், கற்களென்றே வழங்குதல் போல, பொதுவாக மனிதர் என்று வழங்குதல் கொண்டு எல்லாரையும் ஒரேதன்மையராயாக்கிவிட எவராலும் இயலாது. மனிதர் மிருகம் பறவை யாதியவைகளிற் சண்டாளத்துவம் கற்பிக்கப் பெற்று, தீண்டப்படாத அச் சண்டாள மனிதர் மிருகம் பறவைகளைத் தீண்டினால், நீராடி சுத்திபெறவேண்டுமென்ற விதி இருக்க, விதிகடந்த காந்தியின் கூற்றை ஏற்க யாரும் இசையத்தக்கதில்லை. விக்டோரியா மகா ராணியவர்கள் செங்கோலோச்சிய



காலத்தில், சாதி சமய ஆசாரங்களின் சுதந்திரத்தில் தலையிடப்படாதென வரையறை செய்துகொண்ட மேதாவிகளின் உயர்ந்த மதிவலியை ஒருசிறிதும் மதியாத காந்தியார், திருக்கோயிலைப்பற்றியும் தீண்டாதாரைப்பற்றியும் தலையிட அருகரல்லர். அவரவர்க்குரிய ஆலயங்களில் ஆதிகாலந்தொட்டு, ஆண்டவனாலும் ஆக்கியோராலும் வகுத்த முறைப்படி வழிபாடு செய்தலே அவரவர்க்குரிய கடனாகும். திருக்கோயிலை இழிவு படுத்தவும், ஒருவகுப்பாரைத் தீண்டாதார் தீண்டாதாரென்று பறையடித்து இழிவு படுத்தவும் கலகமூட்டா திருத்தலே சீரிய செயலாகும்.

## “செட்டிநாடு.”

இப் பெயர் தாங்கி காரைக்குடியிலிருந்து வெளிவரும் வாரத்தாள் மலர்–10, இதழ்–3, பக்கம்–3ல், ‘தஞ்சாவூர் திருவாரூர் பெரிய கோவில்களும், ஆதித் திராவிடர்களும்’ என்ற தலைப்புடன் ‘சில சரித்திர ஆராய்ச்சிக் குறிப்புகள்’ என வெளியிட்ட ஆதித் திராவிட வகுப்புத் தலைவர் ராவ்பகதூர் ஆர். சீனிவாசன் அவர்களின் அறிவுத் திறனையும் ஆராய்ச்சித் திறனையும் பெரிய மரக்கால் கொண்டுதான் அளக்கவேண்டும். பெருமையிற் சிறந்த திருக்கோயில்கள் செத்துக்கெட்ட பறையர்களைத் தெய்வமாகக் கொண்டு சோழ மன்னனாற் கட்டப்பட்டன என்றும், அம்மன்னன் புலைச்சியை மணந்தான் என்றும், தியாக ராஜப் பெருமான் என்பவர் தியாகன் சாம்பான் என்றும், புருஷோத்தமராகிய இராமபிரான் ஒரு பறையனைப் பெரிய சிநேகராகக் கொண்டிருந்ததாய் இராமாயணத்திலே சொல்லப்படுகிறதாகவும், இவைகளை யெல்லாம் தொண்ணூறுவயதுவரை மண்ணிலிருந்து மண்ணாய் மடிந்த ஒரு கிழப்பெரியார் கண்டுபிடித்ததாக ஒரு பறைப் பத்திரிகை முன்னமே கூறியிருப்பதாகவும், இன்னோரன்ன அபத்தக் களஞ்சியம்—ஆபாசக் கொட்டில்களாகவுள்ள சண்டாளச் செயலைச் செட்டிநாட்டுப் பத்திரிகை முன்பின் யோசியாமல் பத்திபத்தியாய் வெளியிட்டது, பத்திரிகையின் பெயருக்கும் மதிப்பிற்கும் உரியதன்று. அதுகண்டவெந்த ஆஸ்திகனும் மனம் வருந்தாதிரானென்பது ஒருதலை. அதுகுறித்து செட்டிநாட்டுப் பத்திராதிபர் ஒரு மறுப்போ குறிப்போ வெளியிடாமையால், அது அவருக்கு முடன்பாடேபோலும் என எண்ண இடந்தருகின்றது.

தெய்வசிகாமணி.

உ

# ஹரிஜனங்களும் ஆலயங்களும்.

ஸ்ரீரங்கத்திலிருந்து "டி. எஸ்" எழுதுகிறார்.

சாஸ்திரம் என்பது ஏதோ மனுஷ்யனால் செய்து வைக்கப்பட்டது போலவும், அதை மாற்றலாம் போலும், அழிக்கலாம் போலும், இப்போது வியவகாரம் நடந்துவருகிறது. அப்படியானால் எந்தமனுஷ்யன் அதைமாற்றலாம்? ஒருமனிதன் செய்ததான ஒரு நிபந்தனை எத்தனைகாலம் தான்ஊர்ஜிதத்திலிருக்கும்? எத்தனைஜனங்களைத்தான் அது கட்டுப்படுத்தும்? இப்படி எத்தனையோ நூற்றாண்டுகளாக மாறுதல் செய்ய முடியாமலும், செய்யப்படாமலும் நடந்துகொண்டு வருகிற இந்த சாஸ்திரத்தை இன்று மாற்ற வேண்டுமானால் யார் மாற்றுகிறது? யார் அதற்கு அதிகாரி? தெரியவில்லை. நம்முடைய ஹிந்துமதம், வேதத்தை ஒப்புக்கொண்ட மதம். வேதம் என்பது பகவானால் சொல்லப்பட்டது. அது ஏற்பட்டகாலம் எது என்று சொல்முடியாது. அது அநாதி. சிலர் இந்தவேதம், சாஸ்திரம், ஆகமம் இவைகள் பிராமணர்களால் செய்யப்பட்டன என்று சொல்லுகிறார்கள். அது முற்றிலும் தப்பான எண்ணம்.

நமது இந்தியா தேசமானது நாகரீகத்தில் எந்தத் தேசத்திற்கும் பின் வாங்கினதில்லை. ஐரோப்பியதேசத்திற்கு நாகரீகம் ஏற்பட்டதற்கு முன்னமே நமது இந்தியாதேசத்தில் நாகரீகம் இருந்து வந்திருக்கிறது. அப்பேர்ப்பட்ட தேசத்தில் ஒருசாதியார் ஒன்றை ஏற்படுத்தவும், மற்றவர்கள் அதை அனுஷ்டிக்கவும் என்பது கொஞ்சமும் நடக்கமுடியாத காரியம். அதிலும் இராஜ்யாதிகாரம் பூராவும் பிராமண ரல்லாதார்களாலேயே நடந்து வந்திருக்கிறது. அப்படியிருக்க இந்த சாஸ்திரங்கள் பிராமணர்களால்தான் ஏற்படுத்தப்பட்டது என்பது தப்பான எண்ணம். இந்தத் தீண்டாமை பஞ்சமர்களுக்கு மாத்திரமல்ல. பிராமணர்களுக்குள்ளும், ஜாதிகளுக்குள் ஜனன மரணாதிகள் ஏற்படும் காலத்திலும் பிராமண ஸ்திரீகள் வீட்டு விலக்காகும் காலத்திலும், இவர்களையும் தீண்டாதவர்களாகவே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இது பிராமணர்களாகவே ஏற்படுத்திக்கொண்ட சாஸ்திரம் என்று எப்படிச் சொல்லலாம்? பிராம்மணர்களுக்குக் கடுமையான விரதங்களையும், உபவாஸாதிகளையும், ஆசாரங்களையும், அனுஷ்டானங்களையும், சிரார்த்தங்களையும், தர்ப்பணங்களையும், பிராயச்சித்தங்களையும், பணச்செலவுகளையும் ஏற்படுத்தியிருக்கிற இந்த சாஸ்திரத்தை பிராமணன் ஏற்படுத்தினது என்று எப்படிச் சொல்லக்கூடும்? இதை அனுஷ்டிக்க முடியாமல் எத்தனை பிராமணர்கள் பதிதர்களாக அலைகிறார்கள். பிராமணர்களால் இப்படி சாஸ்திரம் உண்டாக்கப்பட்டிருந்தால் அவர்களாகவே இப்போது அந்த சாஸ்திரங்களை மாற்றி இருக்கமாட்டார்களா?

வேதம், ஆகமம், சாஸ்திரம் முதலியவற்றை ஒப்புக் கொள்ளாவிட்டால் எப்படி அர்ச்சாவதாரங்கள் சத்யம் என்று நாம் சொல்ல முடியும்? எப்படி அவைகளைத் தெய்வமென்று நம்பமுடியும்? ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீமான் தேசிகாச்சாரியார் அக்ராசனத்தில் நடந்த கூட்டத்தில் "பஞ்சமர்களும் ராமன், கிருஷ்ணன்



என்னும் பேரிட்டுக்கொண்டு மேற்படி தெய்வங்களையே வணங்கி வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களை அவர்கள் வணங்குகிற தெய்வங்களிருக்கிற தேவாலயங்களில் பிரவேசிக்கக் கூடாது என்று சொல்லலாமா" என்று கேட்கிறார். இந்த அர்ச்சாவதார ரூபமாக எழுந்தருளியிருக்கிற பகவானைச் சேவிக்க வேண்டுமென்று பஞ்சமர்கள் ஆசைப்படுவது வாஸ்தவமாக இருந்தால் அவர்கள் அவைகளை வெளியில் வரும்போது வணங்குவதிலும் வழிபாடு நடத்துவதிலும் ஒருவிதமான ஆக்ஷேபணையும் கிடையாது; அதற்காகவே வெளியில் புறப்படும்படியான உத்ஸவாதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கோவிலுக்குள் தான் வருவேனென்றால் அது ஹிந்துமதக் கொள்கைக்கே விரோதமானது.

ஸ்ரீ உ. ப. வே கோஷ்டிபுரம் ஸ்வாமி சாதித்திருக்கிறபடி எந்த சாஸ்திரத்தை நம்பி அவர்கள் தெய்வம் கோயிலிலிருக்கிறதென்றும் உள்ளே போகவேண்டுமென்றும் இவ்வளவு பிரயத்தனப் படுகிறார்களோ அதே சாஸ்திரத்தில் பஞ்சமர் உள்ளே போனால் அந்தத் தெய்வம் வெளியேபோய் விடுமென்று எழுதியிருக்கிறது. அப்படியே தெய்வம் வெளியே போய் விட்டால் பஞ்சமர்கள் போய் அந்த இடத்தில் என்ன செய்யப் போகிறார்கள்? ஒருக்கால் இப்பவும் எழுதியிருப்பதை அவர்கள் நம்பவில்லையோ? அப்படியானால் கோவிலுக்குள்ளிருக்கும் பிம்பத்தில் தெய்வம் இருக்கிறது என்று சொல்லுகிற சாஸ்திரத்தைத்தான் ஏன் நம்பவேண்டும்? அப்படியானால் வேத சாஸ்திர ஆகமங்களில் சொல்லியிருப்பதில் எந்தப் பாகம் ஸத்தியம்; எந்தப் பாகம் பொய் என்று யார் நிர்ணயிக்கிறது? மஹாத்மா காந்தியும் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியா ரவர்களும் மற்றும் அவர்கள் கொள்கையைச் சேர்ந்தவர்களுந்தான் தர்ம சாஸ்திரத்தை விதிப்பதும் அழிப்பதும் என்பதை அவர்களே ஒப்புக்கொள்ள மாட்டார்களென்று தோன்றுகிறது. அப்படி ஒருக்கால் அவர்கள் ஸ்வேச்சையாகத்தான் சொல்லுவார்களென்றால் அப்போது அவர்களுடன் விவாதப்படுவதில் உபயோகமில்லை. எந்தக் காரணத்தினால்தான் அவர்கள் தர்மசாஸ்திரத்தை மாற்றத் தாங்களே அதிகாரிகள் என்று சொல்லலாம். அவர்களும் தெய்வத்தையும் தெய்வத்தின் கட்டளையையும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்பதையும் ஒப்புக்கொள்ளுவார்களென்பதில் ஒருவிதமான ஆக்ஷேபணையு மிருக்க முடியாது. ஒருக்கால் இவ்விதம்பஞ்சமர்களை கோவிலுக்குள் விட்டால்தான் அவர்கள் நம்முடன் ஒரே கோஷ்டியாகச் சேருவார்கள்; ஆங்கிலேயர்கள் நம்முடைய ஒற்றுமையைக்கண்டு பயந்து நமக்கு சுயராஜ்யம் அளிப்பார்கள் என்று நினைக்கலாமோவென்றால் அப்படி அவர்கள் நினைக்கமாட்டார்கள் என்றே தோன்றுகிறது. ஏனென்றால், அவர்கள் கொள்கையாவது ஸ்வராஜ்யம் ஒருவர் கொடுத்து நாம் வாங்கவேண்டியதில்லை. அது நம்முடைய ஜென்ம சுதந்திரம் என்று வெளிவந்திருக்கிறது. அப்படி ராஜாங்கத்தார் கொடுத்துத் தான் வாங்கவேண்டுமென்றாலும்கூட அப்போது நம்முடைய மதத்தைப் பரிவர்த்தனைகொடுத்து அதற்குப் பிரதிப் பிரயோஜனமாக ஸ்வராஜ்யம் வாங்குவது என்பது அநேகர் ஒப்புக்கொள்ளக் கூடாத விஷயம். ஒருவர் இந்தியாவிலுள்ள ஹிந்துஜனங்கள் எல்லோரும் கிறிஸ்து மார்க்கத்தைச் சேர்ந்துவிட்டால் அவர்களுக்கு ஸ்வராஜ்யம் அளிக்கிறோம் என்று சொல்லுவாரானால் அதற்கு மஹாத்மாகாந்தியாவது, அவர்

கக்ஷியைச் சேர்ந்த வேறு யாராவது இணங்குவார்களா? ஒருக்காலும் மாட்டார்கள். பஞ்சமர்களை நம்முடன் சேர்த்துக்கொள்ள வேண்டுமானால், அவர்களை முன்னேற்றத் தூக்கு கொண்டுவரவேண்டுமானால், அதற்காக எவ்வளவு வேண்டுமானாலும் பாடுபடலாம். இஷ்டமுள்ளவர்கள் அவர்களுடன் பந்தி போஜனம் செய்யட்டும். ஆனால், சிலர் மனதின்படி ஒரு ஜாதியாரை முன்னேற்றத் தூக்குக் கொண்டுவர உத்தேசித்து ஒரு மார்க்கத்தைத் தேடுவதானால் அது மற்றவர்களுடைய மதக் கொள்கைக்கு விரோதமாயிருக்கலாமா? பிரிட்டிஷ் இராஜாங்கத்தார் இதுவரையில் நம்முடைய மதத்தில் தலையிடவில்லை. நம்முடைய ஜனங்களை சட்டம் ஏற்படுத்தக்கூடிய சுதந்தரம் பெற்றதற்கு லாபம் மதம் துடிக்கிறது. நமது மனம் பதறுகின்றது. வைதீகர்கள் அதிகாரவர்க்கத்தில் இல்லை என்கிற கொடிய பரிதாபத்தைப் பார்த்தீர்களா? பிரிட்டிஷ் இராஜாங்கத்தில் நாட்டில் ஸ்வய ஆட்சியில் என்ன சௌகரியம், ஹிந்து மதமும் தர்ம சாஸ்திரமும் சில கொள்கைக்காரர்கள் இஷ்டப்படிதான் என்று ஆய்விட்டது. லோகத்தில் வைதீகர்களுக்குப் பணம் வேண்டாம், காசு வேண்டாம்; இவர்கள் பிச்சை எடுத்துக் காலம் கழித்துக்கொள்ளவும் தயார்தான். ஆனால், அவர்கள் வணங்கும் தெய்வத்தையும் அதிகாரவர்க்கத்தினர் இஷ்டப்படிதான் அவர்கள் வணங்கவேண்டுமென்றால் இதைவிட வேறு கெடுதல் உண்டோ? இந்நாட்டில் எவ்வளவு அந்ய மதஸ்தர்கள் இராச்சிய பரிபாலனம் செய்திருக்கிறார்கள். அன்னிய மத அரசர்கள் நமது மதத்துக்குக் கெடுதல் செய்யவில்லையே. அவர்கள் நம் கோவிலுக்குள் வர பிரயத்தனப்படவில்லையே. அவர்களுக்கு நமது தெய்வத்தை அழிக்க மனம் வரவில்லையே! அவர்கள் நமது கோயில் வாசலிலிருந்துகொண்டு நாம் கொடுக்கிற பிரசாதங்களையும் மாலைகளையும் பெற்றுக்கொள்கிறார்களே. வெய்யிலில் போனாலல்லவோ நிழலின் அருமை தெரிகிறது. எதற்காக நமக்கு ஸ்வய ஆட்சி வேண்டும்? நம்முடைய தெய்வத்தை இழக்கவா? நம்முடைய மதத்தை பறிகொடுக்கவா? நம்முடைய வேதசாஸ்திர ஆகமங்களை அடியோடு ஒழிக்கவா? நம்முடைய இந்தியாவில் இந்தியர்கள் சிலர் நம் மூக்கில் கயிறுபோட்டு நம்மை இழுக்கும் இடமெல்லாம் இழுபடுவதற்காகவா, நமக்கு ஸ்வராஜ்யம் வேண்டும்? ஹிந்து தர்மத்துக்கு அழிவுகாலம் வந்துவிட்டதா? எத்தனையோ யுகமாக முதலாழ்வார்கள் காலத்துக்கு முன்முதல் அனுஷ்டித்துவந்த தர்மங்கள் இப்போது பரிதபிக்கின்றன. இப்படிப் புராதனமான வழக்கமிருக்கிறது, சாஸ்திரமிருக்கிறது, அனுஷ்டானம் இருக்கிறது என்று சொன்னால் சிலர் சத்தியாக்கிரகம் செய்கிறோமென்கிறார்கள்.

ஸ்ரீ உ. வே. கோஷ்டீபுரம் மஹான் அருளிச்செய்தபடி வைதீகர்களும் அந்தக் கோவில்வாசலிலேயே பிராயோபவாசம் செய்துதங்கள்பிராணனைத் தியாகம் செய்துவிட்டால் என்ன? ஆனால், அப்படி பிராயோபவாசம் செய்கிறவர்களைப்பற்றி யார் கவனிக்கப் போகிறார்கள்? இவர்கள் காங்கிரஸ் கொள்கையைச் சேர்ந்தவர்களில்லையே.

---

உ

## துறையூரிற் கூடிய தமிழ்ப்புலவர் மகாநாட்டில்
## திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் கூறிய
# வரவேற்பு.

(முற்றொடர்ச்சி: திங்கள்—௩, பக்கம்—113)

வடமொழியாரியம் வருமுன்னர், குமரி முதல் இமயம்வரை ஒரு மொழிவைத் துலகாண்ட தமிழ் மூவேந்தர் காலத்து அறுபத்து நான்கு அருங்கலைகளும் தமிழில் மலிந்திருந்த நாட்டில், கருத்துரைக்க மொழியில்லையென ஏக்கற்று நிற்பது இக்கூற்றைப் பகருவோரது வெள்ளறிவினை வெளியாக்குகின்றது. வங்காளம், பம்பாய் மாகாணங்களிலுள்ள ஆங்கிலப் பட்டதாரிகள் கலைநூற்களிலும் ஆங்கிலத்திலும் புலமையெய்தியிருந்தும் தத்தம் தாய்மொழியிலும் தாய் நாட்டிலும் தமது பழக்கவழக்கங்களிலும் பெரிதும் பற்றுடையரா யிருக்கின்றனர்; தமிழ் நாட்டுப் பட்டதாரிகளோ இத்தகைய சிறப்புகள் உடையரெனப் புகழ்தற்கில்லை.

இக்கூறியவற்றால் தமிழ் நாட்டிலுள்ள கல்வி நிலையங்களும் பல்கலைக் கழகங்களும் கல்வித் தலைவர்களும், தமிழ் வளர்ச்சிக்குரியவற்றை இதுகாறும் செய்திலரெனவும், இதுபோது கையாளப்பட்டுவரும் கல்வி முறையில் தமிழ் மாட்சியினை ஆங்கிலங் கற்போர் அறிந்துகொள்ளாதவாறு கற்பிக்கப்படுகிறதெனவும், ஆங்கிலவாயிலாகக் கல்வி கற்பிக்கப்படுவதால் பல்கலைக் கழகத் தேர்வுகளில் பட்டம்பெற்று வெளிவருபவர்மனப் பண்புகள்(Culture)அடையாதவராய், கல்விவளர்ச்சியில் கருத்தற்றவராய் நாட்டின் நலத்திற்கு உழைக்காதவராய், அடிமை வாழ்வையே நாடுபவராய், பழந்தமிழ் நாகரிகத்தினை சிறிதும் உணராதவராய் வீணே கழிகின்றனர் எனவும், இம்முறையை நூறாண்டுகளாகக் கையாண்டதில் எய்திய பயன் யாதுமில்லையெனவும், தாய்மொழி வளர்ச்சியில் கருத்துடையவர்கள், ஆங்கிலமாதிய பிறமொழிகளை வளர்த்தலே கருமம் என்றிருக்கும் கல்வி நிலையங்களையும், கல்வித் தலைவர்களையும் நம்பியிருத்தல் தவறெனவும் கண்டாம்.

முன்னேற்றம் பெறுதற்கு முயலும் மனிதர்கள் கலைத்திறன், நுண்ணறிவு, உடல்வலம், பொருள் வளம், அரசுரிமை ஆதிய இவற்றையே விரும்புகின்றனர். இவைமட்டும் வாய்த்தால் மன அமைதியும், இன்ப வாழ்வும் மனிதர் பெறுதல்கூடுமா? இக் கூறியனவெல்லாம் அளவிலவாகப் பெற்றிருக்கும் அமெரிக்கரும் ஐரோப்பியரும் மன அமைதியுடன் சுகமே

வாழ்கின்றனரா? சுய ஆட்சிபெற்ற ஒவ்வொரு நாட்டிலும் குழப்பம், வாணிபமும் செல்வமும் மிக இருந்தும் வறுமை, படைத்திறனும் அதிகாரமும் அளவிலவாகப் பெற்றும் அயராக்கவலை, கிறீத்துநாதரின் மெய்யுரைகளே தாம் கைக்கொள்ளும் வேதமெனப் பெருமிதம்பேசி, மக்களையும் நாடுகளையும், பிறர் உரிமைகளையும் தாந்தாமும் அடிப்படுத்த வேண்டுமெனுங் கருத்தினால் செய்துவரும் பொறாமை, வஞ்சனை, சூழ்ச்சி, தீச்செயல் ஆதிய கொடுமைகட்கு ஓர் எல்லைதானும் இல்லை. குரூகர் என்னும் துரைமகனாரும் ஈன்சதீன் என்னும் துரைமகனாரும் வாணிபத்துறையில் கோடிக்கணக்கான பொருளை ஈட்டினவர்; இகத்தில் பெறற்கரும் பேறுகள் அனைத்தையும் பெற்றிருந்தும், உயர்ந்த குறிக்கோள் யாதுமின்றி, உண்ணுவது உறங்குவதுமாகிய வாழ்க்கையில் இன்பநிலை காணாது உவர்த்து, அவமே தமது உயிரை மாய்த்துக்கொண்டனர். மேனாட்டினர், நாகரிகத்தின் உயர்நிலையை அடைந்தவர் எனும் மயக்க உணர்ச்சியால் அன்னாரின் ஒழுகலாறுகளையும் மனப்பான்மைகளையும் நம்மவரிற் பலர் கைக்கொள்ளுகின்றனர். 'நாளையே கூற்றுவன் வருவான்; இன்றே உண்டு களியுங்கள்' என்ற கொள்கையால் ஆடவர் பெண்டிர் எனப்படுவோர், தமது பழங்குடி மரபுகளை ஓம்பாது களியாட்டயர்தலே நோக்கமாகத் தமது மனிதத் தன்மைகளை நாடோறும் இகழ்ந்து வருவதைக் கண்டு மேனாட்டு மூதறிஞர்கள் மிகவும் கவல்கின்றனர். வெளி மயக்குகளால் ஏமாற்றமடைந்து மேனாட்டினரின் சீர்கெட்ட கொள்கைகளும் ஒழுகலாறுகளுமே நாகரிகமெனக்கொண்டு அவற்றையெல்லாம் பன்னாடைகளைப் போல் கைக்கொள்ளமுயலும் நம்மவரின் ஏழைமைக்கு மிகவும் இரங்குகின்றேம். குடித்தனங்கள் மனைமாட்சியற்று மாய்ந்து போகவிட்டு, துரைத்தனத்தைச் செப்பனிடுவது அறிவுடைமையோ? உலகியல் நெறியில் உயர்நிலை எய்தியுள்ள மேனாட்டினரின் வாழ்க்கை நாகரிகமல்லவெனின், நாகரிகமென்பது தான் என்ன? நாகரிகம் என்பதற்கு நகரத்தனம்(Civilization)என்பது மேனாட்டினரின் விடை. வறுமை, பிணி, படிற்றொழுக்கம் ஆதியன நகரங்களில் மலிந்திருக்கின்றன. இங்கு கலையறிவுமிகுந்தும், நடையுடை பாவனையாகிய வெளித்தோற்றங்கள் மாறியும் காணப்படுகின்றன. நாகரிகத்தின் பண்புகள் இவைதாமோ? ஆமெனின், இவைவேண்டப்படுவனவா?என்பது அறிவுடையோர் ஆராய்ச்சிக்குரியது. நாகரிகம் என்றசொல்லே, வடமொழி நூல்களில் பயிலப்பட வில்லையெனவும், இதன் அடிச்சொல்(Rootword)யாதெனவும்,இம்மொழி ஆக்கத்தின்விதியாதெனவும்உசாவி,நாகரிகம்என்பது வடமொழியாளர் அறியாததொன்றெனவும் தெரிந்துகொண்டேன்.இங்ஙனமாகமேனாட்டுக்கலைவாணராலும்,வடமொழியாளராலும்உரைதானும்காணலாகாதநாகரிகம்என்னும் பதத்தினை தெய்வப் புலவராகிய திருவள்ளுவராதியோர் கண்ணோட்டம், இரக்கம் என்றபொரு



ளில் வழங்கினர். பெறற்கரும் பேறுகளை யெல்லாம் ஒருங்கே பெற்றானெனினும் இரக்கமொன்றில்லையேல் அவனை நாகரிகன் எனத் தமிழறிஞர் மதியார். தம்மவர், வறுமையாலும், பிணியாலும், அறியாமையாலும் தம்மருகே இடரும் இன்னலுமுற்று வருந்த,தாம்மட்டும் உண்டு களித்திருப்பது மனிதத்தனம் அல்ல வென்பதைக் கடைப்பிடித்து "யான்பெற்ற இன்பம் பெறுக விவ்வையகம்" எனத் தமிழ்மறை அறுதியிட்டது. பிறப்பினால் ஒருவற்கு உயர்வு தாழ்வுகள் வாய்ப்பதே முறை என்னுங்கொள்கை தமிழ் நாட்டில் நுழையத் தலைப்பட்டதும், 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' 'சாதி யிரண்டொழிய வேறில்லை' 'ஒழுக்கம் உயர்குடி உய்க்கும்' "மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும் கீழல்லார் கீழல் லவர்' என்றெல்லாங்கூறி தமிழ் மூதறிஞர் கடிந்திருக்கின்றனர். திருநாளைப்போவார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருப்பாணாழ்வார், பெத்தான் சாம்பான் ஆதியவர்களின் உண்மை வரலாறுகளினின்றும் நாம் அறியத்தகும் படிப்பினையாது? சைவ வைணவத்தலைவர்கள் தொண்டக்குலத்திற் சேர்ந்தவர்; பிறப்பினால் எந்த இனத்தவராயினும்,

"எவரேனுந் தாமாக விலாடத் திட்ட திருநீறுஞ் சாதனமுங் கண்டாலுள்கி, உவராதே யவரவரைக் கண்ட போது உவந்தடிமைத் திறநினைந்தங்குவந்து நோக்கி, யிவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி யிரண்டாட்டாதொழிந்தீசன் திறமே பேணிக், கவராதே தொழுமடியார்"

என்றவா றெல்லாம் பாராட்டி ஒழுகினர். மறையவர் குலத்திற் றோன்றிய அழலோம்பும் அப்பூதியடிகள் அப்பமூர்த்திகளைத் தனது தியானப் பொருளாகவும் வழிபடு கடவுளாகவுங் கொண்டு உய்தி பெற்றனர். திராவிடசிசுவென சங்கரரால் புகழப் பெற்ற திருஞானசம்பந்தர், திருப்பாணாழ்வாருடன் தோழமை கொண்டும், திருநாவுக்கரசரைத் தமது ஞானத்தந்தையே எனவும் போற்றி வாழ்ந்தனர். மணிவாசகப்பெருமானும் பிறப்பினால்உயர்வு பேசும் கொள்கையினரை, "சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும், ஏதமிலி" எனக் கடிந்திருக்கின்றனர். பிறப்பால் உயர்வுதேடும் பெற்றியினர், தமது வெளிப்பூச்சும் தாழ்வடமுமே சிறந்த ஆசாரமெனக் கருதி ஏனோரைத் தாழ்வு செய்கின்றனர். தமிழர் மதிக்கும் ஆசாரம் இதுவல்ல.

"நன்றி யறிதல் பொறையுடைமை இன்சொல்லோ
டின்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோ
டொப்புர வாற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து."

என்பதே பழந்தமிழ் மக்கள் பாராட்டி வளர்த்த ஆசாரம். தமிழ்ப் பெருங்குடிமக்க ளாயினோர் இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத் தமி

யர் உண்டலுமிலர்; பிறரஞ்சுவ தஞ்சிப் புகழெனினு முயிருங் கொடுக்குவர்; பழியெனி னுலகுடன் பெறினுங் கொள்ளார்; தமக்கெனமுயலா நோன்றாட் பிறர்க்கென முயலுநர்! இச்சீரிய கொள்கைகளைப் பின்பற்றிய ஒழுக்கமே தமிழர் நாகரிகம். கல்விச்செல்வம், பொருட்செல்வம் ஆகிய இரண்டு செல்வங்களையும் ஒருங்கே பெற்றாலும், அரசியல் உரிமைகள் அனைத்தையும் அடைந்தாலும், இக்கூறிய நாகரிகப் பண்புகள் மனிதர்மாட்டு அமையாவிடில் தாம் பெற்ற செல்வமாதியவற்றால் தமக்கும் பிறர்க்கும் கேடுகள் விளையும் என்பது ஒருதலை. நாகரிகத்தின் உண்மைப் பண்புகளைத் தெரிந்து, அச்செந்நெறியில் ஒழுகி, சிறந்த நிலையில் வாழ்க்கையை நடத்திய சீரியோரது வரலாறுகளைக் கற்றுணர்ந்து கோடற்குப் பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்களும் தமிழ்க்கலைகளும் தமிழ்க்கல்வியும் இன்றியமையாத சாதனங்கள்.

இனி, ஆங்கிலத் துறையில் நுழையாதிருந்துவரும் நமது தமிழ்நாட்டுத் தலைவர்கள் மொழிவளர்ச்சியின்பொருட்டு எவ்வகையானும் துணைபுரிகின்றனரா வென ஆராய்வோம். தமிழ் மூவேந்தரெனப் பாராட்டப்பெறும் அரசர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு நெடுங்காலம்வரை, குறுநில மன்னர், நிலக்கிழவர், செல்வர் ஆகிய பலரும், தமிழில் புலமை மிக்கோராய், காவிய நலங்களைத் தாமேகண்டு இன்புறும் பெற்றிமையுடையராய், புலமை மிக்கோரைத் தெய்வமேபோல் போற்றும் பண்புடையராய் இருந்தமையால் நாடெங்கும் தமிழ்க் கல்வி பரவி, பல திறத்தனவாகிய காவியங்கள் இயற்றப்பட்டுவந்தன. இற்றை நாளிலோ கல்விகற்போரின் நோக்கம் மிகத் தாழ்ந்துவிட்டது. யாதேனுமொரு ஊழியஞ்செய்து ஊதியம் பெறுதற்பொருட்டே கல்வி கற்கப்படுகின்றது. அத்தகைய நோக்கமில்லாதவர் கல்வியை நாடுவதேயில்லை. நமக்குற்ற துணை கல்வியினூங்கில்லை என்ற சீரிய கொள்கையை அறவே மறந்துவிட்டனர். ஆதலால், பண்டைக்காலம் போல் அல்லாது, கல்விக்குரிய சர்தனங்களான புத்தகங்கள் மலிந்திருந்து போதனாமுறை பயின்றுள்ள ஆசிரியர் மிக்கிருந்தும், கலாசாலைகள் ஊர்தொறும் நிறுவப்பெற்றிருந்தும், நாடெங்கும் கலை மலியவில்லை; கலைத்திறம் குன்றிவிட்டது; கல்விப்பொருளை இழந்து, அறியாமையில் மூழ்கி, நலந்தீங்குதானும் தெரியாது அவலமுறும் நாடாகி விட்டது. இப்பொழுதுள்ள செல்வரிற் பெரும்பாலார் கல்வியைப் போற்றுவதில்லை. நூற்பயனை நன்குணர்ந்து தெவிட்டாத இன்பத்திற் றிளைக்கும் திறனற்று, செவியிற் சுவையுணர்வற்று, சிற்றின்ப நுகர்ச்சியினை நாடும் வாயுணர்வின் மாக்களாய் விட்டனர். உலகியல் நிலையில் உயர் பதங்களை நாடி கைப்பொருளை வரையாது வழங்கிப்பெறும் பதவிகளின் கடமைகளைத்தானும் உணர்ந்து கொள்ளாமலும் நேரிய வழியில் முறைசெய்யாமலும் உலகின் நகைப்பொருளாய் வதிகின்றனர். நகரக் கழகங்களிலும் (Municipali-



ties) ஊர்க் கழகங்களிலும் (Village Panchayats) கூற்றக் கழகங்களிலும் (Taluk Boards) நாட்டுக் கழகங்களிலும் (District Boards) நாட்டின் கல்விக் கழகங்களிலும் (District Educational Councils) உறுப்பினராயும், தலைவராயும் அமர்பவர்கள் தமிழ்மொழிப்பற்றுடன் கல்வியை வளர்க்கும் கருத்துடையரானால், தொடக்கக் கல்வியும் உயர்தரக் கல்வியும் எத்துணைத் திருத்தமுறும்? தமிழ்நாட்டினின்று சட்டசபைக்கு அனுப்பப்பெறும் உறுப்பினரும், நகரக்கழகங்களிலிருந்தும் நாட்டுக்கழகங்களிலிருந்தும் பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பப்பெறும் உறுப்பினரும் தமிழ்மொழியைப் போற்றுங் கருத்துடையராயின், தமிழ்மொழி எத்துணை ஆக்கம் பெறும்? இக் கூறிய கழகங்கட்கு மொழிப்பற்று சிறிதுமில்லாதவர்களும், பிறமொழிகளை வளர்க்கும் நோக்குடையார்களும் மிகுதியாக அனுப்பப்படுவதால் தமிழ்மொழி பாதுகாப்பும் போற்றுதலுமின்றித் தளர்வுறுகின்றது. கலைநூற்களிலும் ஆங்கிலத்திலும் புலமையுற்றோர்க்குத் தரப்படும் நன்மதிப்பும் உரிமைகளும் நாட்டுமொழி வல்லோர்க்கு வழங்கப் பெறுவதில்லை.

இன்னனைய குறைபாடுகளை நீக்கித் தமிழ்மொழி ஆக்கம் பெறுதற்குரிய வழிகளைக் காணவும், அதற்கான துறைகளில் முயலவும் கருதியே தமிழன்பர்களாகிய உங்களை அறைகூவி அழைத்தோம். எங்கள் எளிய வேண்டுதலைப் பொருட்படுத்தித் தத்தமக்குரிய அலுவல்களைவிட்டுத் தொலைவிலுள்ள இந்நகருக்கு எளிவந்தது, தமிழ்மொழியிடத்து நீங்கள் வைத்திருக்கும் உண்மைப்பற்றை விளக்குவதுடன் இம்முயற்சியை மேற்கொண்டுள்ள எம்மனோர்க்குப் பேரூக்கத்தையும் அளிக்கின்றது. இம்மகாநாட்டின் வரவேற்புத் தலைமையை யான் ஏற்க நேர்ந்ததே செல்வத்தின் ஆதரவு மிக்கில்லாது, ஊக்கமொன்றே பற்றுக்கோடாக இக்கூட்டம் நிகழ்கின்றதெனப் போதரும். ஆதலால், போக்குவரத்து வசதிகளிலும், இருக்கைஉணவு முதலிய வசதிகளிலும் காணப்படும் குறைபாடுகளைத் தங்கள் பெருந்தகைமையால் பொறுத்தருளி, இம்மகாநாட்டின் சீரிய நோக்கங்களை நிறைவேற்றுதற்கான கருமங்களைக் கருத்துடன் திட்டஞ் செய்யுமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

தமிழர் மகாநாடு கூடுவதன் நோக்கம் யாதென இதுகாறுங் கூறியவற்றால் நாம் ஒருவாறு தெரிந்துகொண் டிருக்கிறோம். தமிழர் முன்னேற்றமே நமது முடிந்த நோக்கம் என்பதில் ஐயமில்லை. பற்பல துறைகளிலும் மக்கள் உயர் நிலையை எய்தினாலன்றி அவர்கள் முன்னேற்றம் அடைந்தவரெனக் கருதவொண்ணாது. இத்தகைய பரந்த நோக்கங்களுடன் கூடும் மகாநாடு சிலமணிநேரங்களில் எதனையும் முடிவுகட்ட முடி

யாது. ஆதலால், எல்லா வகையான முன்னேற்றங்கட்கும் அடிப்படையான ஒரு சீரிய பொருளையே ஆராயவும் திட்டஞ் செய்யவும் கூடியிருக்கின்றோம், என்பதை அன்பர்கள் நினைவில் அகலாது வைத்துக்கொள்ள வேண்டியது. நமது முன்னேற்றத்திற்குத் தடையாயிருப்பன பலவென்றாலும் அவையனைத்தும் அறியாமை என்ற ஒன்றில் அடங்கிவிடும். அறியாமையாகிய இருளை நீக்குதற்குக் கல்வியாகிய விளக்கொளி ஒன்றே ஏற்ற சாதனம். தமிழ்நாட்டில் கல்வி பரவுதற்குத் தமிழ்க் கல்வியே ஒப்புயர்வற்ற கருவியாகும். தமிழ் நாட்டிலுள்ள மக்களனைவரும் தமிழைத் தமது தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும் அவர்களைத் தமிழர் எனக் கூறுதற்கில்லை. தமிழ் மக்கள் அனைவருமே தமிழ் கற்றுப் புலமை மிக்கோராய் ஆய்விடின், நலந்தீங்குகளைத் தெரிந்து சீரிய நிலையை எய்துவாராதலின், இவ் வரும் பணியை இன்றே தொடங்கவேண்டுமெனக் கருதி இங்கு கூடியிருக்கின்றோம். தமிழ் நாடெங்கும் தமிழ்க் கல்வியைப் பரப்ப முயலுவதே நமது நோக்கமென அதனை நிறைவேற்றுதற்குரிய முடிபுகளைச் செய்வதானால் நாம் அனைவரும் ஒத்த மனதுடன் தமிழ்மொழியின் ஆக்கத்தினை வளர்த்தற்குரிய முடிபுகளைச் செய்யவும் அவற்றின்வழித் தொண்டு புரியவும் கூடும். அதனோடமையாது இங்குள்ள ஒவ்வொருவரும் மொழி வளர்ச்சிக்கு நெருங்கிய தொடர்பில்லாத பல துறைகளில் இறங்கித் தத்தம் கொள்கைகளை நாட்டப்புகுவரெனில் குறுகிய காலத்தில் ஒரு முடிபையுங் காணாது பிளவுபட்டுச் சிதறுண்டு போகநேரும். ஆதலால், இம்மகாநாட்டின் நோக்கம் தமிழ்மொழி வளர்ச்சி என்பதையும் அதற்கான வழிதுறைகளைத் தேடி முடிப்பதே நமது கருமம் என்பதையும், இந்நோக்கத்துடன் நெருங்கிய இயைபில்லாத பொருள்கள் இம் மகாநாட்டினுக்கு ஏற்புடையனவல்ல என்பதனையும் அன்பர்கள் கருத்தில் வைப்பார்களாக.

தமிழ் வளர்ச்சி யொன்றே இம்மகாநாட்டின் நோக்கமெனின், தமிழ்ப் புலவர் மகாநாடும் தமிழ் மாணவர் மகாநாடும் அதனை நிறைவேற்றக்கூடுமே; தமிழர் மகாநாடு இயற்றத்தகும் கருமம் என்ன? தமிழரிற் பெரும்பான்மையோர் தமிழ்ப்புலவரும் அல்லர்; தமிழ்மாணவரும் அல்லர்; தமிழ்க் கலைகளைப் பரவச் செய்தற்கு தமிழ்ப் புலவரும் தமிழ்மாணவரும் இன்றியமையாத கருவிகள் என்றாலும், மொழிப்பற்றுடைய தமிழர்கள், பொருளையும், தமது செல்வாக்கையும் வரையாதுகொடுத்து உதவினாலன்றித் தமிழ்ப் புலவர்களும் மாணவர்களும் யாதும் செய்ய இயலாது. இம்முத்திறத்தினரும் ஒன்று சேர்ந்து தமிழ்மொழி வளர்ச்சிக்குரிய வழிகளில் தொண்டாற்றவேண்டுமெனக் கருதியே, மூன்று மகாநாடுகளும் கூட்டப்பெற்றிருக்கின்றன.



இம்மகாநாடுகளின் உண்மை நோக்கங்கள் யாதெனத் தெரியாதபடியால் மக்களின் சீர்திருத்தத்தில் கருத்துடைய நண்பர்கள் செய்தித் தாள்களிலும், துண்டுத் தாள்களிலும் தாம் நிறைவேற்ற விரும்பும் முடிபுகளை வெளியிட்டு வருவதைப் பார்த்தேன். மக்கள் நலமுற வேண்டும் என்னுங் கருத்துடன் இவ் வருந் தொண்டினை இவர்கள் மேற்கொண்டது நாம் பாராட்டத்தக்கதாகும். நாட்டிற்கு நலம் புரியவேண்டும் என்ற நன்னோக்கமே இவர்களைத் தூண்டுகின்றது. சமூகவாழ்வில் பலதிறப்பட்ட சீர்திருத்தங்கள் இன்றியமையாது வேண்டப்படும். பழையனவெல்லாம் கழியற்பாலனவோ? புதியனவெல்லாம் கொள்ளற்பாலனவோ? என்பது அறிவுடையார் ஆராய்ந்து தெளிய வேண்டுவதாகும். இவர் கொள்கைகளில் சிலவற்றில் எனக்கு முரண்பட்ட கருத்தும் சிலவற்றில் உடன்பாடான கருத்தும் இருந்துவருகின்றன. உடன்படுவனவற்றிலும் சீர்திருத்தமுறுதற் பொருட்டுச் சூழும் முறைகளில் வேறுபாடும் உண்டு. ஆனால், இவைபற்றிய ஆராய்ச்சிகள் இக்கூட்டத்தில் கருதக்கூடியன வல்லவாதலால், அவை குறித்து யாதும் பேசாதொழிகின்றேன்.

தமிழ்மொழி ஆக்கம் பெறுதற்பொருட்டு கல்வி நிலயங்களிலும், பல்கலைக்கழகங்களிலும் தலைவராயும், பணியாளர்களாயும் அமர்பவர் மிகுந்த தமிழ்ப் பற்றுடையாராயிருத்தல் இன்றியமையாததெனவும், இக் கல்வி நிலையங்கள் இயற்றத்தகும் தமிழ்ப்பணிகள் யாவையெனவும், தமிழ்நாட்டுத் தலைவர்கள் தமிழ்த்தொண்டு செவ்வனம் நடைபெறுதற்கான கருமங்களில் கருத்தூன்ற வேண்டுமெனவும் மேலே கூறியுள்ளோம். இக் கல்வி நிலயங்களையே நம்பியிருத்தல் சாலாது எனவும் கூறினோம். இனி, அரசியலார் நடத்திவரும் கலாசாலைகளாலும், ஊர்க்கழகங்கள் (Local Bords) நடத்திவரும் கலாசாலைகளாலும், பல்கலைக் கழகங்களாலும் இயற்றத்தகும் தமிழ்த்தொண்டு மிகச் சுருங்கிய பயனை விளைக்குமே யன்றி, நாடெங்குமே தமிழ்க்கலை பரவுதற்கு உரிய வசதிகளை அளிக்க முடியாது என்பது ஒருதலை. தமிழ்ப் புரவலராயும், தமிழன்பராயும் உள்ள அனைவரும் ஒருங்கு சேர்ந்து இம்மொழித் தொண்டினை ஊக்கத்துடன் புரிய முற்படவேண்டும். தமிழன்பர்கள் தாந் தாமும் தனித்தனியே செய்யவல்ல சிலதொண்டுகள் உண்டு. அறிவுடையோர் போற்றும் தமிழ் நூற்களை ஒவ்வொருவரும் விலைகொடுத்து வாங்கித் தக்கார் துணைகொண்டு தினமும் பயிலுதல் வேண்டும். தத்தம் ஊர்களில் நூல் நிலையங்களை நிறுவியும், கலைபயிலிடங்களை நாட்டியும், கல்வி கற்காத எல்லா மனிதர்களையும் வேற்றுமையின்றி ஆதரவுடன் ஒருங்கு சேர்த்து, அவர்கட்கு நல்லுணர்ச்சியும், ஒருமைப்பாடும், மனத்திண்மையும், சீலமும், பொதுநல நோக்கங்களும் வளரக்கூடிய முறையில் ஆய்வுரைகளைப் புகட்டுதல் வேண்டும். தமிழ்ப்புலவர்கட்கு நன்மதிப்பும்,

தமிழ் மாணவர்க்கு நல்லாதரவும் தருதல்வேண்டும். ஞானசாகரம், தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச்செல்வி, கலாநிலயம், சித்தாந்தம் ஆதிய சிறந்த தமிழ்த் தாள்களை மிகுதியும் போற்றி வளர்க்கவேண்டும். தமிழரும், தமிழ்மொழியும் ஆக்கம் பெறவேண்டுமென்ற சீரிய நோக்கத்துடன் பல்லாண்டுகளாய் தொண்டினை ஆற்றிவரும் காந்தைத் தமிழ்ச் சங்கத்தில் ஆயிரக் கணக்கினராய் உறுப்பினராகி உதவிபுரிய முற்படல் வேண்டும். திங்களொன்றிற்கு நான்கணுக்கள் கொடுத்து சங்கமுயற்சிகளை வளம்பெறச் செய்வீரெனில் சிறந்த முறையில் தமிழ்க்கல்லூரி நிறுவுதல்கூடும்; நல்லாசிரியரின் துணையினால் இயல் இசை நாடகமெனும் முத்தமிழையும் வளர்த்தல் கூடும்; ஆங்கில வடமொழிக் கலைகளை நன்குணர்ந்து தமிழில் புலமைமிக்க கலைவாணரின் உதவிகொண்டு அருங்கலையனைத்தையும் தமிழில் ஆக்குதல்கூடும். இன்னனைய நலங்களை எளிதில் ஆக்கவல்ல காந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வளத்தைப் பெருகுவித்து நலம்புரிதல் தமிழ் மூதறிஞரின் கடமையாகும்.

முத்தமிழ்த் துறைபோகிய தமிழன்பர்களே! தங்கள் நல்வருகையால் தமிழ்நாடு அறிவும் ஆக்கமும் பெறுதற்குரிய முறைகள் இன்றே வகுக்கப்பெறும்! தன்னலங்கருதாது பிறர் நலமே கருதும் உங்கள் சீரிய தொண்டினை எற்று அளந்தறிய வொண்ணுத சிறப்பினைத் தமிழ் நாட்டிற்கு வழங்குதற் பொருட்டு தமிழன்னை புரிந்து வந்த தவம் இன்றே பயன்பட இருக்கின்றது! தமிழ்த் தாயின் தவப் புதல்வர்களே! வம்மின்! தங்கள் நல்வரவினாலும், அரிய தொண்டினாலும் நாடு நலம்பெறுவதாக!

## நீதிமொழிகள்.

கல்வியறிவில்லாத அற்பர்கள் தம்மைப் பிறர் மதிக்க வேண்டுமென்று கருதி மற்றவர்களுடைய குற்றங்களை மட்டும் சிறிதும் அச்சமின்றித் தூற்றுவார்கள். பெரியோர்கள் பிறர்குற்றங்களைக் கூறுதிருப்பதோடு தம்மைத் தானும் புகழமாட்டார்கள். ஓசை மங்கிய தரா, வெண்கலமாகிய இவைகள்தாம் பேசுமேயல்லாது, மாற்றுயர்ந்த தங்கம் கலீரென்று பேசுமோ?

தீர்க்க தரிசிகளாகிய மகரிஷிகள் பரம்பரையாகச் சிவானுக்கிரகத்தாற் செய்த புராண இதிகாச உண்மைகளை இக்காலத்தார் காதிலேற்றுக்கொள்ளார்கள். சிவபிரானருளிய வேத சிவாகமங்களென்று சொல்லக்கேட்டதும் இதுமுழுப்பொய் என்பார்கள். இப்படிப்பட்டவர்கள் சோதிடர் குறிகாரர் மந்திரவாதிகள் பின்சென்று அவர் சொல்லை அங்காந்த வாயுடன் எதிர்பார்த்து நிற்றல் 'சம்புவே, என்ன புத்தி'!!

வி. பொன்னம்பலம்.

உ

# அறிவியல், அழகியல், அன்பியல்.

## (SCIENCE, ART AND RELIGION.)

**எனது அருமைச் சகோதரி சகோதரர்களே!**

[சைவசித்தாந்த மகாசமாஜக் காரியதரிசியும், "சித்தாந்தம்" பத்திராசிரியரும், உயர்தர நீதிமன்ற வழக்கறிஞரும் ஆகிய சென்னை சைவத்திருவாளர் **ம. பாலசுப்பிரமணியமுதலியார்** BA. BL. அவர்கள், ஆவணி உஎ, உஅ (11, 12-9-1932) களில் நடைபெற்ற பலவான்குடி மணிவாசக சங்கத்தின் 22-ம் ஆண்டு நிறைவுத் திருவிழாவில் நிகழ்த்திய தலைமைப் பேருரையின் சாரம்: பி. எச். ஸ்ட்ரீடர் எழுதிய "பொருள்" (B. H. Streeter's "Reality") என்ற நூலின் முதலிரண்டு அதிகாரங்களைத் தழுவியுள்ளது.]

என்னையுமோர் பொருட்படுத்தி ஈண்டுத் தலைமை வகிக்குமாறு பணித்த நுங்கள் பெருந்தகைமைக்கு வந்தனம். ஆறறிவு படைத்த மக்களெல்லாரும் சமய வுணர்ச்சியுடையவர்களாக இருத்தல் இயல்பென்று பல்லாயிர ஆண்டுகளாகக் கருதப்பட்டது. கடவுளில்லையென்ற உலகாயதக் கொள்கை மிகப்பண்டையதெனினும், கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் அது நார்பயில் தேசந்தன்னில் நான்மறை பயிலா நாட்டிலுங்கூட உயிர்பெற்று விளங்கவில்லை. ஆனால், கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் நிகழ்ந்த அறிவியற் புதுமை வெளியீட்டின் பெருக்கத்தால் உலகாயதம் மீண்டும் தலை காட்டிற்று. ஆனால், இப்போது அறிவியற்றுறையில் பேரறிஞர்களாகக் கருதப்படுவோரெல்லாரும் உலகாயத்தை வெறுத்து ஆஸ்திகக் கொள்கையையே மேற்கொண்டுள்ளார்கள். இடைக்காலத்தே தோன்றிநின் றழிந்த மலைவு நமது நாட்டில் சில பகுதிகளில் "சுயமரியாதை" யாகச் சிலரைப் பீடிக்கின்றது. எனவே, இம்மலைவின் வரலாற்றை மிகச் சுருக்கமாகவே மேல் நாட்டு நூல்களின் துணைகொண்டே ஆராய்வோம். உலகாயதக் கொள்கையும் அதின் மறுப்பும் சிவஞான சித்தியார் பரபக்கத்துள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன வெனினும், மேற் கூறிய மலைவு மேல் நாட்டு அறிவியலின் போலித் துணைகொண்டு உலவுவதால் அவ்வறிவியலின் மெய்த்துணை கொண்டே அம்மலைவைத் தீர்ப்பதுதான் அறிவுடைமையாகும்.

ஐரோப்பாவில் கிரீஸ் தேசத்தில் டெமாக்ரிடஸ், எபிக்யூரஸ் என்பவர்களால் உலகாயதம் இற்றைக்கு இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு

முன்னரே ஓதப்பட்டது. என்றாலும், நியூடன் என்ற கணித சாஸ்திரியார் கண்டுபிடித்த மூன்று இயக்கச் சட்டங்கட்கு (Newton's Three Laws of Motion) முன்னர் உலகாயதத்துக்கு ஐரோப்பாவில் எவ்வித வலிமையும் ஏற்படவில்லை. மேற் கூறிய நியூடன் சட்டங்கட்கு முன்னர் வானத்தை நோக்குவோர் கடவுளின் கைவேலையையும் பெருமையையுமே ஞாயிறு, திங்கள், விண்மீன்கள் முதலியவற்றில் கண்டார்கள். நியூடன் முதன் முதலாக அவைகளின் இயக்கமெல்லாம் மூன்று சட்டங்களின் படியே நடக்கின்றனவென்று கண்டுபிடித்தார். உடனே சில அறிஞர்கள் இருப்பு யந்திரங்களைப்போல் சில சட்டங்களுக் குட்பட்டு நடக்கும் உலகத்துக்கு ஒரு தனி முதல்வன் ஏற்றுக்கு என்று ஏசத் தொடங்கினர். லாப்லேஸ் என்ற வானசாஸ்திரி எழுதிய வான நூலில் கடவுளைப்பற்றிய பிரஸ்தாபமே யில்லையே என்று நண்பர் ஒருவர் வினவ, "ஐய! அந்த மேற்கோளின் அவசியம் எனக்கு வேண்டியதில்லை" (Sir, I have no need of that hypothesis) என்று அவர் கூறினர்.

டார்வின் என்ற அறிஞர் கூர்தல் முறையை (Evolution) விளக்கிய பின்னர் அறிவியற்றுறையில் உழைக்கும் அறிஞர் பலர் கடவுளில்லையென்று பேரிரைச்சல் செய்யத் தொடங்கினர். "எண்பத்துநான்குலட்சம் யோனிபேதங்களும் கடவுள் படைப்பல்ல; ஒன்றிலிருந்து ஒன்றாக இயற்கையிலேயே தோன்றின" வென்றார்கள். "பறவைகளின் இறக்கைகளும் மக்கள் கண்களும் அதிசயிக்கக் கூடிய கடவுளின் விசித்திர வேலைகளல்ல; இயற்கையில் தோன்றியவைகளே" யென்றார்கள். உணர்ச்சி என்பது வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு எனும் மூன்றின் சேர்க்கையால் தோன்றும் சிவப்பைப்போன்றதென்றார்கள். (Conciousness is only an epiphenomenon) ஓர் அடுக்குக் காகிதத்தை ஒரு புறத்தில் வைத்துவிட்டால் ஓர் அச்சு இயந்திரம் எவ்வாறு அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து அச்சடித்து, வெட்டி, மடித்து நியூஸ் பேபர் என்ற வர்த்தமானப் பத்திரிகைகளாக மற்றொரு புறத்தில் தானே அடுக்கி விடுகிறதோ, அவ்வாறே இயற்கை யென்ற பெரியதொரு இயந்திரமும் உலக காரியங்களைப் பல சட்டதிட்டங்களோடு தானாக நடத்திவருகிறதென்று அவ்வறிஞர்கள் கூறுகின்றார்கள். சுருங்கக் கூறின் அறிவு, இச்சை, செயல், உணர்ச்சி முதலியவைகளையுடைய (எனவே இம்மட்டிலாவது மக்களைப்போன்ற) ஒரு கடவுள் உலக காரியத்துக்குக் காரணரல்லர். ஆனால், இவைகளில்லாத வெறும் இருப்பு இயந்திரம் போன்ற "இயற்கை" யென்பதே உலக காரியத்தை நடத்துகிறது யென்பதே இவர்கள் கூற்று.

இக் கொள்கையை ஒரு சிறிது நுணுகி ஆராய்ந்தால் இதிலுள்ள அறிவீனம் வெட்டவெளிச்ச மாய்விடும். அறிவு இச்சை செயல்களையுடைய



கடவுளைக் காரணனாகக் கொள்வது மக்கள் சாயலில் கடவுளை நமது மனம் படைக்கின்றதே தவிர வேறொன்றுமில்லை யென்பது உலகாயதர் கூற்று. இதை ஆங்கிலத்தில் "Anthropomorphism" என்பார்கள். இக்குற்றம் இக்கொள்கையில் இருப்பதால் இதை ஒப்புக்கொள்ள முடியாதென்று உலகாயதர் கூறுகின்றனர். ஆனால், அவர்களது இயந்திர இயற்கை(Mechanomorphism) என்ற கொள்கையில் இதைவிடப் பெரியதொரு குற்றமிருப்பதை உலகாயதர் உணர்வதில்லை. மக்களது அறிவு, இச்சை, செயல்களைக் கொண்டே இயந்திரங்கள் ஆக்கப்பட்டுள்ளன; பல்சக்கரங்கள், சுற்றுகின்ற பல விசைகள் முதலியவற்றைக் காகிதத்தில் அச்சிட்டு, அதை வெட்டி, மடித்து, அடுக்குவதற்காகவே மனிதன் தனது அறிவு, இச்சை, செயல்களைக்கொண்டு அச்சு இயந்திரமாகத் திட்டம் செய்துள்ளான். அந்த முறையில் அந்த இயந்திரம் இல்லாவிட்டால் மேற்கூறிய வேலைகளை அது செய்யாது. மேலும், மேற்கூறிய இயந்திரமானது புத்தகமாகத் தைத்து, பைண்டு செய்வதற்கு உதவாது; வட்டமாகவோ, சித்திரங்களாகவோ காகிதத்தை வெட்டுவதற்கு உதவாது; காகிதப்பைகள் செய்ய உதவாது; வேறு எதற்கும் உதவாது. எனவே, ஒரு இயந்திரத்தைக்குறித்த ஒரு தொழில் செய்வதற்காகப் படைப்பது மனிதனுடைய அறிவிச்சை செயல்களே. எனவே, (Mechanomorphism) என்ற இயந்திர இயற்கைக் கொள்கையில் மக்கட்சாயல் என்றகொள்கை (Secondhand anthropo-morphism) ஒரு கை மாறியிருக்கிறது. ஆகவே, ஒருகை மாறிய இரண்டாந்தர மக்கட்சாயற் கொள்கையைவிட முதல் தரமான மக்கட்சாயற் கொள்கையே மேல் என்று கூறுவதில் எவ்வித தவறுமில்லை. இதைத்தான் பழைய காலத்தில் சைவ ஆன்றோர்கள் கடவுள் நிமித்தக்காரண ரென்றும், சித்துப் பொருள் இயக்கினாலன்றிச் சடப்பொருள் இயங்காதென்றும் சுருங்கக் கூறினார்கள். ஒரு காரியத்துக்கு ஒரு காரணம் உண்டென்ற கொள்கையிலேயே மக்கட்சாயல் (Anthropomorphism) பொதிந்து கிடக்கின்றது. நெருப்பு காகிதத்தைச் சுடுகின்றதை நாம் கண்ணால் பார்க்கின்றோம். சுடுகின்ற செயலை நாம் காண்பது. அச்செயலுக்கு நெருப்பு காரணம் என்பதை நமது அறிவு ஊகிக்கிறது. ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொரு காரணம் உண்டென்பதே மக்கட்சாயற் கொள்கையாக முடிகின்றது. காண்ட் (Kant) என்ற தத்துவசாஸ்திரி இது மனத்தின் இயல்பு என்று கூறினார். (The human mind is so constituted that it cannot help making this kind of inference-cause and effect.)

நினைத்தல், பேசுதல், செய்தல் என்ற மனம் வாக்கு காயங்களின் தொழில்கள் மூன்றும் மக்கட்சாயலாக இருத்தலேயன்றி வேறு சாயலாக இருக்க முடியாது. நாற்காலி என்ற இடத்து, நான்கு கால்களையுடைய இருக்

கையென்றே நாம் கூறவேண்டியிருக்கிறது. நான்கு கால்கள் என்று கூறவேண்டியது மட்டும் அவசியமேயொழிய கால்கள் என்றவுடனே எலும்பு, தசை, மயிர், நகம் முதலியவைகள் நாற்காலியின் கால்களுக்கும் உண்டு என்று கொள்ள வேண்டிய அவசியமில்லை. அஃதேபோல், மலையின் சிகரம், ஊசியின் காது, எரியின்வாய், குடத்தின் கழுத்து என்று கூறவேண்டியிருப்பினும் சிகரத்தில் குடுமி, காதினுள்மென்தோல், வாயினுள் நாக்கு, கழுத்தில் நெஞ்சுக்குழி முதலியன இருப்பதாகக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. இவைகளை இன்னும் விரிப்பில் மிகப்பெருகும். சுருங்கக்கூறின், மனிதன் உலகத்தைத் தனது அறிவுகொண்டு அளப்பவனும் ஆகிறான்; அளவு கோலாகவும் இருக்கிறான். (Man is both the measurer and measure of the Universe) எனவே, மக்களது மனம் மக்கட் சாயலாகவே சிந்திப்பதில் இழுக்கொன்றுமில்லை. அது மக்களறிவுக்கு இன்றியமையாத இயற்கையேயாம். (Anthropomorphism is inevitable in human thought) இவ்வாறு சிந்திப்பதில் நேரே மக்கட் சாயலாகக் கொள்ளாது மக்களாலாக்கப்பட்ட இயந்திரச் சாயலாகக் கடவுளைக் கொள்வதுதான் அறிவின்மை யென்பது இதுகாறுங் கூறியவாற்றால் விளங்குமென்று எண்ணுகிறேன்.

இனி ஆங்கிலத்தில் Reality என்று கூறப்படும் பொருள் என்பதை மூன்று கூறாக விவரிப்பது ஒருவகை மரபு. நமது நாட்டிலும் இப்பாகுபாடு உண்டென்பதைப் பின்னர் தெரிவிப்பேன்;. உண்மை (அல்லது அறிவு), அழகு, நன்மை (அல்லது அன்பு), என்ற மூன்றின் சேர்க்கையே பொருள் என்பது. (Truth, Beauty and Goodness are the component parts of Reality) இவற்றின் தன்மைகளை விவரிக்கும் இயல்களுக்கு முறையே அறிவியல், அழகியல், அன்பியல் என்று பெயர். (Science, Art and Religion) இவற்றுள் ஒரு இயலிற் கூறப்பட்ட விஷயங்கள் மற்றொன்றில் கூறப்படமாட்டா. ஒரு இயலில் கூறப்படாத விஷயங்கள் உலகத்திலேயே இல்லையென்று கொள்வது பேதைமையேயாகும். அறிவியல் ஒன்றினால் மட்டும் அறியக்கூடாத கடவுளை இல்லை யென்று கூறுவது, மேலே கண்டவாறு பெரும் பேதைமையே.

இவற்றுள் (Science) என்ற அறிவியலின் தொழில், பொருளை அளவிட்டுக் கூறுவது. (The realm of Science is quantity) அறிவியல் நுட்ப ஆராய்ச்சிச் சாலைகளில் எங்கு பார்த்தாலும் அளவைக் கருவிகளை நிறைந்து கிடக்கும் (A scientific research laboratory is full of measuring apparatus). அழகியல் (என்ற Art) பொருளின் தன்மை, குணம் அழகு முதலியவற்றை அளவிட்டுக்கூறாது, சிற்பம், ஓவியம், பாட்டு, ஆட்டம் முதலியவற்றின் மூலம் நமக்கு உணர்த்துவது. அன்பியல் (என்ற



Religion) நன்மை தீமைகளையும் மக்கள் நடவடிக்கை நுட்பங்களையும் மக்களுக்கும் பொருளுக்கும் உள்ள பலவகைத் தொடர்புகளையும் பல வாழ்க்கை உதாரணங்களின் மூலம் நமக்கு உணர்த்தும் தொழிலுடைத்து.

இவை மூன்றற்குமுள்ள வித்தியாசத்தை ஒருசிறு உதாரணங்கொண்டு விளக்குவாம். ஆதிமூர்த்தி பிள்ளை யென்பவரை நாம் அறியோம் என்று வைத்துக் கொள்வோம். அறிவியலானது அவரது உயரம், பருமன், கழுத்தளவு, மூக்களவு, கையளவு, காலளவு, எடை, நிறம், பல், உதடு முதலியவைகளைப்பற்றிய விவரங்கள், உடம்பிலுள்ள பல அடையாளங்கள் முதலியவற்றை வரையறுத்து அளவிட்டு போலீஸ் அறிக்கைகளில் விவரிப்பதுபோல் கூறும். அழகியலோவெனில், ஒரு புகைப்படம், சிற்பம், அல்லது எழுத்தோவியமாகச்செய்து அவரது தன்மை, குணம், நிலை முதலியவற்றைக் குறிப்பால் உணர்த்தும். அவர் சிவபக்தராயிருந்தால் படத்தில் விபூதி உருத்திராக்க மணிந்து, தொழுதகை தலைமேலேறத் துளும்புகண்ணீருள் மூழ்கி, கருணை மிகுந்த பார்வையோடு விளங்குவர். அவர் கள்வர் தலைவனாயிருந்தால், கன்னக்கோலும் கறுப்புமேனியும் முறுக்கு மீசையும் முண்டாசும் திருட்டுப் பார்வையும் நெரித்த பற்களும் இழுத்துக்கட்டிய அரைக்கச்சையும் கொண்டு படத்தில் அச்சுறுத்துவர். அன்பியலோவெனில் புறத்தோற்றம், அகநெகிழ்ச்சி, தன்மை. குணம், செயல் முதலியவற்றில் கூடியவரையில் அவரைப்போன்ற மற்றொருவரைக் காட்டி நமக்கு அறிவுறுத்தும். தொல்காப்பியம் ஒரு சிறந்த அறிவியல் நூல்; மணிமேகலை ஒரு சிறத்த அழகியல் நூல்; பெரியபுராணம் ஒரு சிறந்த அன்பியல் நூல். உலகத்திலுள்ள எல்லாவற்றையும் அளவுஎன்ற ஒன்றின் மூலமே அறியமுடியாது. மூன்றடி நீளமும் இரண்டடி அகலமுமுள்ள இரண்டு சரஸ்வதி படங்களுள்ளன. ஒன்றின் விலை ஒரு ரூபாய். மற்றொன்றின் விலை ஐந்து ரூபாய். இதிலிருந்து பின்னையது முன்னையதைவிட ஐந்து மடங்கு அதிகம் அழகுள்ளது என்று கூறமுடியுமா? ஒரு குற்றத்துக்கு மூன்று மாதம் தண்டனையும், மற்றொன்றுக்கு ஆறு மாதமும் விதிக்கப்பட்டால் பின்னைய குற்றம் இரண்டு பங்கு கொடியது எனலாகுமா? ஓர் உபாத்தியாயருக்கு முப்பது ரூபாய், மற்றொருவருக்கு அறுபது ரூபாய் சம்பளமென்றால் முற்கூறியவர் படிப்பு அரைப்படிப்பு; பிற்கூறியவர் படிப்பு முழுப்படிப்பு என்பாருண்டா? விரிக்கிற்பெருகும். Reality என்ற பொருளானது அளக்கக்கூடிய பகுதிகளையும் அளப்பரிய பகுதிகளையும் உடைத்து என்பதே அறிவுடைமையாம். எட்டிங்டன் என்ற பிரபல வான சாஸ்திரி பின்வருமாறு கூறுகின்றார்:—"தூலஉலகம் சூக்குமஉலகம் என்ற பாகுபாடு மேற்போக்கானது; அதைவிட ஆழ்ந்தது அளப்புறும், அளப்ப

ரிய பகுதிகளென உலகத்தைக் கூறிடுவதே" (I venture to say that the division of the external world into a material world and a spiritual world is superficial, and that the deep line of cleavage is between the metrical and the non-metrical aspects of the world—Prof. A. S. Eddington in "Science, Religion and Reality" edited by Needham Sheldon Press-1925 at page 200 , இவ்வாசிரியரே மற்றோரிடத்தில் விரித்த அறிவியலின் குறுகிய திட்டமுடைய தொழிலை மிக அழகாகக் கூறுவதை மட்டும் திரட்டித் தந்து இப்பகுதியை முடிக்கிறேன். "Leaving out all aesthetic, ethical or spiritual aspects of our environment, we are faced with qualities such as massiveness, substantiality, extention, duration, w h i c h are supposed to belong to the domain of physics. In a sense they do belong; but physics is not in a position to handle them directly. The essence of their nature is inscrutable; we may use mental pictures to aid calculations, but no image in the mind can be a replica of that which is not in the mind. And so in its actual procedure, physics studies not these inscrutable qualities but pointer readings which we can observe. The readings, it is true, reflect the fluctuations of the world qualities; but our exact knowledge is of the readings, not of the qualities. The former have as much resemblance to the latter as a telephone--number has to a subscriber" (Eddington in the same book at p. 199.) சுருங்கக் கூறின் அறிவியல் மூலம் அளவைக் கருவிகளிற் காட்டப்படும் குறிப்புக்களை யறிகின்றோமே யன்றிப் பொருளின் உண்மையான தன்மைகளை அறியமுடியாது. டெலிபோன் நெம்பருக்கும் அந்த நெம்பரையுடைய முதலாளிக்கும் எவ்வளவு ஒற்றுமை யுண்டோ, அவ்வளவுதான் கருவிக் குறிப்புகட்கும் பொருளின் தன்மைகட்கும் உள்ளது என்பது மேலே கூறப்பட்டது.

இம்மட்டில் மேனாட்டவர் ஆராய்ச்சியை நிறுத்தி நமது தேசத்தில் இப் பாகுபாடு எவ்வாறுள தென்பதை ஒரு சிறிது ஆராய்வாம். பொதுவாக ஹிந்து சமயத்தில் அறிவு, அழகு, அன்பு (Truth, Beauty & Goodness) என்பன முறையே, பிரமன், விஷ்ணு, சிவன் என்ற திரிமூர்த்திகளாக உருவகம் செய்யப்பட்டன. பால் போன்ற இக்கொள்கையைக் கடைந்து சத்து சித்து ஆநந்த மென்ற முறையில் சுவையுறு நெய்யாகச் சைவ சித்தாந்தம் நமக்குத் தருகிறது. அறிவை நான்கு திசைகளினின்



றும் வரும் செய்திகளைக் கொண்டு பெருக்கவேண்டும். அறிவின் உருவகமாகிய பிரமன் நான்கு முகங்களையுடைய திசைமுகனாயினான். வேதம் அறிவுக் களஞ்சியம் எனப்படும். பிரமன் வேதம்போம் வாயானென்றும், வேதவித்தென்றும் கூறப்படுகிறான். அறிவே புதிய கருத்துக்களையும் தோற்றங்களையும் செயல்களையும் உண்டாக்கும் ஆற்றலுடையது. எனவே, பிரமன் படைப்புத் தொழிலுடையான். அறிவின் சிறந்த சக்தி நாவன்மை. எனவே, பிரமனும் தனது சத்தியை நாவில் வைத்துள்ளான். பிரமனது சத்தியாகிய சரஸ்வதியும் நாமகள், கலைமகள் எனப் பெயர்பெற்றாள். இன்னும்விரிப்பில் மிகப் பெருகும். இவ்வாறே அழகின் உருவகமாகிய விஷ்ணு பட்டு பீதாம்பரங்களோடும் கௌஸ்துப மணி முதலிய அணிகலன்களோடும் நீலமேக நிறத்தோடும் அழகுற விளங்குகிறார். அவரது சக்தியும் அழகுக்கு இலக்கான இலக்குமியே. பொருளின்றேல் அழகில்லை (உலக வழக்கில்). எனவே, அழகின் சக்தி பொருட் சக்தியாகவும் உள்ளாள். பொருளுக்கும் அழகுக்கும் நிலைக்களனாகிய விஷ்ணு காத்தல் தொழிலைச்செய்தலுமியல்பே. பொருளின்றிக் காத்தல் கைகூடாது. காத்தற் கடவுளுக்கே துஷ்டரைத் தொலைக்க அவதாரம்செய்யும்பொறுப்பும்ஏற்பட்டதுமியல்பே. காத்தலுக்குத் தோள் வலியும் அகன்ற மார்பும் தேவை. பலசாலிக்குப் பெரிய வலியுற்ற நுரையீரல்கள் (Lungs) இருத்தல் வேண்டும். அவைகளையுடையவன் அகன்ற மார்புடையவனாதல் வேண்டும். அவனது சக்தியும் மார்பிலே யுள்ளது எனக் கூறலாம். இம்முறையில் நோக்குங்கால் மகா விஷ்ணுவும் சக்தியை மார்பில் வைத்துள்ளதும் பொருத்தமாகவே யிருக்கிறது. மேற்கொண்டு விரிப்பிற் பெருகும். இவ்வாறே சிவனுருவத்தையும் சிந்திக்கலாம். அன்புருவாகிய சிவன் தன்னுருவில் பாதியைத் தனது சத்திக்குத் தந்த நுட்பத்தை நோக்குக. அழிப்பே இளைப்பாற்றல் என்ற காருண்யச் செயல். அழிவில்லாத உலகத்தில் நிற்பதற்கும் நிழல் கிடைக்காது. நமது முப்பதாவது பாட்டனார் முதல் நமது வரையில் கணக்கெடுத்தால் எத்தனை பேருண்டோ, அத்தனை பேரும் உயிரோடிருந்தால் நமது வீட்டிலல்ல நமது ஊரிலேயே இடங் காணுமா? எத்தனை காணிகளில் விளையும் நெல் ஒருநாள் சாப்பாட்டுக்காகும்? என்றெல்லாம் யோசித்துப்பார்த்தால் அழிப்புத் தொழிலின் கருணையும் அவசியமும் விளங்கும். எவ்வளவோ துன்பம், வறுமை, மனத்தளர்ச்சி, உடல் தளர்ச்சி முதலியன அழிப்பினால் தொலைகின்றன. எனவே, அன்பின் உருவகமாகிய சிவன் அழிப்பதும் அன்பின் செயலே. அவனது சக்தியும் அருட்சத்தியே. சிவனுடைய அணிகலன்களான தலைமாலை, பிறை, நாகம், புலித்தோல் முதலியனவும் பல அன்புச் செயல்களின் அடையாளங்களே. இவற்றின் விரிவை யெல்லாம் சிவ பராக்கிரமம் முதலிய நூல்களிற் காண்க. மேற்

கூறியவைகட்கு வேறு பல தத்துவார்த்தங்களும் ரஹஸ்யார்த்தங்களும் உள்ளன. ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இது, பொதுவான ஹிந்து சமயத்தில் சுருதி, மிருதி, இதிகாசம், புராணம் என்பவற்றால் கூறப்பட்ட விஷயம். "சிவம் சத்தி நாதம் விந்து" ......என்ற சித்தியார் சுபக்கச் செய்யுளிலும் இந்த உண்மை கூறப்பட்டுள்ளது.

இனி, சைவ சமயத்தில் சச்சிதாநந்தப் பொருள் சோமாஸ்கந்த ரூபமாகவும் சிவலிங்க ரூபமாகவும் விளங்குவதை ஈண்டு விரிப்பில் மிகப் பெருகும். சதாசிவ ரூபம், சிவலிங்க மான்மியம் முதலிய நூல்களுள் இதன் விரிவைக் காணலாம்.

இதுகாறும் கூறியவாற்றால், அறிவியல், அழகியல், அன்பியல் என்ற மூன்றும் சேர்ந்தாலன்றி பொருளின் (Reality) முழுத்தன்மையை அறிய முடியாதென்றும், அறிவியல் ஒன்று கொண்டே. கடவுளையாவது உலகத்தையாவது அறிய முயன்று, அறியக்கூடாத விடத்துக் கடவுளில்லையென்பது அறியாமையே யென்றும், அறிவு அழகு அன்பு மயமான கடவுளை (Reality as Truth, Beauty and Goodness) நமது நாட்டினர் திரிமூர்த்திகளாகவும் சச்சிதாநந்தப் பொருளாகவும் ஓதுவது மேல் நாட்டு முறைக்கும் பொருந்தமுள்ளதே யென்றும், என் சிற்றறிவிற்கும் சிறு கால வளவைக்கும் தகுந்தவாறு விளக்கினேன். இத்துணை நேரம் மிகப் பொறுமையுடன் எனது புன்மொழிகட்குச் செவி மடுத்த உங்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன். சுபம்.

---

பூதலய மாகின்ற மாயைமுத லென்பர்சிலர்
  பொறிபுல னடங்குமிடமே
பொருளென்பர் சிலர்கரண முடிவென்பர் சிலர்குணம்
  போனவிட மென்பர்சிலபேர்
நாதவடி வென்பர்சிலர் விந்துமய மென்பர்சிலர்
  நட்டநடு வேயிருந்த
நாமென்பர் சிலருருவ மாமென்பர் சிலர்கருதி
  நாடிலரு ளென்பர்சிலபேர்
பேதமற வுயிர்கெட்ட நிலையமென் றிடுவர்சிலர்
  பேசினரு வென்பர்சிலபேர்
பின்னுமுன் னுங்கெட்ட சூனியம தென்பர்சிலர்
  பிறவுமே மொழிவரிவையாற்
பாதரச மாய்மனது சஞ்சலப் படுமலாற்
  பரமசுக நிட்டைபெறுமோ?
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
  பரிபூர ணானந்தமே. (தாயுமானார்.)

உ

# முத்தமிழ் முறை.

திருவாமாத்தூர்
கௌமாரமடாலயம் திரு. தி. மு. செந்திநாயகம் பிள்ளையவர்கள்.

பொதியைமலையின்மீதமர்ந்துள்ள தவசிரேட்டராகிய அகத்திய முனிவரால் ஆதியில் வகுக்கப்பட்ட இலக்கணவரம்பினையுடைய தமிழானது, இயல், இசை, நாடகம் என்னுமூவகைப்பட்டு நிகழ்ந்துள்ளது. அவற்றுக்குரிய பேதம், நிறத்தாலும் சுவையாலும் யாப்பினாலும் கொள்ளற்பாலன வென்பதுமுறை.

அம்முறையில் நிறத்தினாற் கொள்ளுமிடத்து, இயற்றமிழ் இருண்ட கருநிறத்தினதென்றும், இசைத்தமிழ் அழகிய செந்நிறத்தினதென்றும், நாடகத்தமிழ் எளிய வெண்ணிறத்தின தென்றும் கொள்ளவேண்டு மென்பதை விளக்கி, மஹான் வண்ணச்சரபம் ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் தமது அறுவகை யிலக்கணத்தின் இரண்டாவது பகுதியாகிய சொல்லிலக்கணத்திற்பொதுவியல் கூ-வது சூத்திரத்தில்,

"இயலிசை நாடக மென்னுமுத் தமிழ்ச்சொல்
பொதிய மால்வரைப் பொழிலென விருண்டும்
உலவா முனிவோ ருடையெனச் சிவந்தும்
வீழ்புன லருவியில் வெளுத்துந் தோன்றும்"

என விதந்துள்ளார். கறுப்பு, சிவப்பு, வெள்ளையென வாளாகூறிச் செல்லாது, தமிழ்த் தலைவராகிய குறு முனிவரது பருவதத்திலுள்ள சோலையின் இருள், காவியுடை, நீரருவி யென்பவற்றை யுவமை காட்டிக் கூறியது மிக்க சிறப்பின தென்னலாம்.

சுவையாற் கொள்ளுமிடத்து, தேனைப்போன்று முதிர்ந்த கடுஞ்சுவையினது இயற்றமிழும், தேவரமிழ்து போன்ற மிதமான இன்சுவையினது இசைத்தமிழும், பாலைப்போன்று குறைந்து இலேத்த சுவையினது நாடகத்தமிழும் ஆமென்றதுடன், நிறபேதத்தைப்பற்றி மற்றொருவித வுவமையாலமைத்து, பார்வதி, திருமகள், வாணி போல்வனவெனக் காட்டி, இரண்டையும் ஒருங்கே

ஒரு கவியிற் குறிப்பிட்டு, புலவர்புராணம், பொதியாசலப்படலம், நான்காவது கவியிற் சுவாமிகள்,

"வள்ளை யங்குழைப் பார்ப்பதி மலர்த்திரு மடக்கை
வெள்ளை வாணியென் றுளவொரு மூவரில் விளங்கிக்
கள்ளை வானகத் தமுதினைப் பாலினைக் கடுக்குங்
கொள்ளை முத்தமிழ்ப் பிறப்பிடங் குலவுதென் பொதியை"

எனச் சிறப்பித்துக் கூறியருளினர்.

யாப்பினாற் கொள்ளுமிடத்து, வெண்பா, அகவற்பா, வஞ்சிப்பா, மருட்பா முதலியன இயற்றமிழும், கட்டளைக் கலித்துறை, விருத்தப்பாக்கள் முதலியன இசைத்தமிழும், இராகதாளங்களுக்குப் பொருந்திய விதத்தில், பல்லவி, அநுபல்லவி, சரணம் என்னும் ஒழுங்கில், பேரின்பம் அல்லது சிற்றின்பப் பொருளில், கீர்த்தனை, பதம் எனத் தனித்தனியும், சரித்திரங்களை யமைத்துத் தொடர்பாகவும், பல்லவி முதலிய அங்கங்களின்றிச் சில அடிகளாற் சிந்து எனவும் கூறப்படுவது நாடகத்தமிழும் ஆகும் என்றேற்படுகின்றது.

இவையன்றி, மற்றொருவகையால் முத்தமிழின் திறபேதங் கூறுமிடத்து, தமிழென்ப தன்மையி லொன்றே யாகியும், பகுத்துப்பார்க்கும் புலவர்களது நுட்பத்துக்கேற்ப மூவகைப்பட்டு விளங்குகின்றதென்னும் சமரசத்தைக் குறிப்பால் விளக்கி, ஒருத்தியாகிய கலைமகளது அங்கங்களையே காட்டி அவளது கரிய கூந்தலையும், செவ்விய அதரத்தையும், வெள்ளிய திருமேனியையும் ஒத்தன முத்தமிழ் வேறுபாடென்று மாதைப் புராணத்தில் ஸ்ரீ சுவாமிகள்,

"கூந்தனிக ரியற்றமிழுங் குமுதவாய் நிகரிசையுங் கோலம் போல்வ, தாந்தகைய நாடகமு மறிந்துவக்கும் புலவர்சில ரிலத்துள்ளார், காந்தழுக்காற் றிளங்கவிஞர் பலருளரா லெனைக்கருணைக் கடலிற் றோய்தாள், மாந்தர்சிலர் நாவினின்று மரிபிரமர் தொழிற் செய்கலை வாணித் தாயே"

என்று கூறித் துதித்துள்ளார். இவைநிற்க:

நாடகத்தமிழ்போல் எளிய நடையில் அகவற்பாக்களும்— இயற்றமிழ்போற் கடின நடையிற் கீர்த்தனை, சிந்து, பதங்களும் சிலர் பாடுவதுண்டு; அவை முழுப் பொருத்தமாகா; அவற்றைக் கலப்புத் தமிழென்றே கொள்ளுதல் சால்பு. அந்தந்த யாப்புக்



கேற்ற திறமுஞ்சுவையுமுள்ள சொற்களை ஆங்காங்கு நிரட்டிப் பாடுமியல்புடையோரே முத்தமிழும் பாட முன்வரலாம். அவ்வாறின்றி, ஒரேவிதமான நடை நிரம்பக் கூறுவோர் தமக்கமைந்த வொருவகையிலேயே யமையக்கடவர்.

இசைத்தமிழாகிய விருத்தங்கள் முதலியன நடுத்தரத்தின. ஆதலால், அதுபற்றி அதிகம் விவரிக்கவேண்டியதில்லை.

"வெளிறப் பாடலும் வேறோர் கலையென
இருளக் கூறலு மிடத்தா லிசையுமே"

(அறுவகையிலக்கணம்)

## நாடகத் தமிழியல்பு

பல்லவத் திருபங் கநுபல் லவமும்
அதனிரு பங்காஞ் சரணமுந் தாளம்
பிறழா தமைத்ததிற் பேரின் பஞ்சொலிற்
கீர்த்தனை யென்றுமற் றேனையக் கிளத்திற்
பதமென் றுஞ்சொலல் பாவலர் வழக்கே.

அநுபல் லவமுஞ் சரணமு மளவிற்
கூடினுந் தாளங் குழம்பா தியாவரு
மறிதரும் பொருளமைந் தவிர்தரி னலமே.

பல்லவம் போன்றே யநுபல் லவமும்
ஒன்றல தொன்றுறு சரணமொன் றன்றி
மூன்றும் வரன்மிகை யைந்தே யொன்பது
பதினொன் றென்றினும் பல்லவத் தலையில்
அவற்றினீ றென்று மழகாற் றிகழ்பவே.

இருவகைப் பல்லவ மின்றி யாடலுக்
கிசைவுறத் தனித்தனி யீரடி நான்கடி
காட்டியோர் பொருளைக் கருதிக் கூறித்
தொகுப்பது சிந்தெனச் சொல்வது வழக்கே.

வீணையிற் சிறந்தோன் விளம்பு மாற்றம்
தழீஇக்கொள னாடகத் தமிழினுக் கழகே
யாயினும் பொருட்சுவை யழியினு மியலிசைச்
சொன்மிகப் புணரினுஞ் சோர்வு படுமே:

வண்ணச் சீர்கொடு வயங்கு நாடகத்
திசைத்தமிழ்ச் சொற்கள்வந் திசையினுந் தகுமே.

(அறுவகையிலக்கணம்.)

சொற்களின் நிறங்கள் ஐந்தென்பதும், அவை வெண்மை, பளிங்கு, கருமை, செம்மை, பொன்மை யெனும் விவரமும் கீழ்க் காண்க.

"எழுத்துரு வறியா வியல்பினர் தாமு
மறியு மாற்ற மனைத்தும்வெண் ணிறமே.

கொல்லா விரதக் குருவாங் குறள்போற்
புந்தியி னளவிற் பொருடருஞ் சொற்கட்
பளிங்கு நிறமெனப் பகர்வது முறையே.

பேயொடு குன்றும் பிளக்கு மாறு
கழறுநா லாதிய கறுத்த நிறமே.

கற்றா ணிடத்தொரு கடவுட் காட்டலும்
அரன்மனை யடிசி லாக்கச் செய்தலுங்
கணபதி கரத்தாற் கயிலை மீதுறச்
சேர்த்தது மாதிய செஞ்சொற் றிரளே.

நால்வரும் பதின்மரு நவின்ற சொற்கள்
பொன்மை நிறமெனப் புகலத் தகுமே.

நிறத்தின் பகுதியை யிவ்வாறு நிகழ்த்தல்
மிகைபடும் புணர்ச்சி பற்றிச் சொற்களின்
ஐவகை நிறமு மறிந்தோர் புலவன்
முத்தமிழ் பாடல் முறையே யாதலின்
ஆணி போன்றோர் பொருட்பெய ரைந்தாற்
காட்டுது மாயினுங் கண்ணினுஞ் சிறந்த
மனத்தாற் காண்டலே வழக்கென வியல்பே.

உலகின ருணவினைத் துயர்ந்த வொருபொருட்
சோறெனல் வெண்சொல் அன்ன மென்கை
பளிங்கு நிறச்சொல் பதமெனல் கருஞ்சொல்
அமுதெனல் செஞ்சொல் அடிசி லென்கை
பொன்னிறச் சொல்லிவண் புகன்று காட்டல்



அம்மையிற் புலமை யணையா ராயிருந்
திம்மையின் முயல்வா ரிகழ்தனன் குணர்ந்தே."

பளிங்கு நிறமும் பழுதில்பொன் னிறமும்
வெண்மையிற் செம்மையின் மேவல் பற்றி
முத்தமி ழாமென மொழிந்தனர் முதியோர்.

(அறுவகையிலக்கணம்.)

எளிய வெண்ணடையில் இராக தாளங்க ளமையத் துதியாயும், வருணனையாயும், சிருங்காரமாயும், சரிதமாயும் பாடப்படும் கீர்த்தனைகள், பதங்கள், சிந்துகள் முதலியனவே நடிப்பதற்கு உரியனவாயிருப்பதால் அவையே நாடகத் தமிழென்று கொள்வது பொருத்தமாகும். அதை விடுத்து, நடனங் கலந்தது நாடகத் தமிழெனக் கொள்வது சிலர் கூற்றாயிருக்கின்றது. மொழிவிதத்தாலும், யாப்பினாலும், தாள ராக சம்பந்தத்தாலும் நாடக மாகு மென்பதே முறை. அத்தகைய கவி நடனமின்றிப் படித்தால் அப் பெயரின்றென்றும், அவற்றைப் படிப்போர் பலரும் நடித்துக் கொண்டே படித்தல் வேண்டுமென்றும் விபரீதம்படக் கொள்ளுதல் கூடாது.

இசைத் தமிழாகிய தேவார முதலியவற்றைச் சிலர் நடனத்திலமைப்பதால் நாடகத்தமி ழென்னலாமோ? நாடகத்தமிழாகிய கீர்த்தனை யாதியவற்றை நடனமின்றிப் படித்தால் அப் பெயர் பெறாதோ? நடனம் உடலின் றொழிலானதால், அதுசம்பந்தத்தால் நாடகத்தமிழுக்குப் பெயரமைதல் வேண்டாம்.

அருணாசலக்கவிராய ரியற்றிய இராமாயணக் கீர்த்தனை, கோபாலகிருட்டிண ஐயரியற்றிய நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, முத்துத்தாண்டவர் கீர்த்தனை, இன்னுஞ் சில ரியற்றிய பெரியபுராணக் கீர்த்தனை, கந்தபுராணக் கீர்த்தனை முதலிய யாவும் நாடகத் தமிழே யாகுமென்பது நிராக்ஷேபம். அங்ஙனமாக, நாடகத்தமிழ் இக்காலத்தில் இறந்துபோயிற்றென்று சிலர் கூறும் வார்த்தை வியர்த்தமான வீண்மொழியே யென்னலாம். அறிஞர் ஆராய்ந் தேற்றருளுமாறு வேண்டுகிறேன்.

ஸ்ரீமத் கண்டபாணி சுவாமிகளா லியற்றப்பட்டுள்ள "முத்தமிழ்ப் பாமாலை" என்னும் நூலிலிருந்து, மூன்று கவிகள் இதன்

கீழ் குறிப்பிட்டு,விஷயத்தை முடிக்கக் கடவேன். ஆசையினாலேயே யன்றி, அகத்தில் அன்றென்ப தாண்மை.

## இயற்றமிழ்—அகவற்பா.

பொதிய மால்வரைப் புண்ணியம் புகழ்ச்சி
றதிக மாதவ மன்னமுத் தமிழ்க்கு
மகுட மேநிகர் வண்பெறு முப்பாற்
றொகுதி யாவையுந் தோய்வுறு சுவடி
யமுத மேயயி லணிநிகழ் களிற்றிற்
குமுதவாய்ச் சசியொடு குலவிப் பொன்னகர்
வலம்வரு சீரினன் வாழ்த்தி யணிதரு
கலனணி மார்புடைக் கதிர்வேற் றடக்கை
வழுதி நாடெனு மகண்முக மேயெனக்
குழுமிய புலவோர் கூறுங் கூடற்
றெண்ணீர் வாவிச் செழும்பொற் றாமரை
யுண்ணீர்ப் பலகையி லுறைதரும் வேலை
யொருக்க வோவென் றேறிய வொருபொரு
ளருக்க னாதிய ரறுவகைச் சமயமு
மற்று மோருயிர் வாழுடற் புசியார்
பற்று மெந்நெறிப் பகுதியும் பரந்தமை
யுணர்ந்து மவ்வா றொழுகியு மதனைப்
புணர்ந்த மேலவர் பொன்னடிப் பூந்துக
ளுச்சிமேற் கரத்தா லோவாது புனைந்து
நச்சிய வாறு நலமுறப் பெறேஎ
னெவ்வா றுய்வதென் றெண்ணி
யிவ்வா றேத்தற் கிசைந்தன னின்னே.

## இசைத்தமிழ்—சந்தப்பா.

(தான தானதன தந்த தந்ததன—தன்னதான)
மேட மாதியன கொன்ற ருந்நிமகிழ்—புன்மையோரூர்
வேலை நீரிடைய மிழ்ந்த வென்றுவரு—தன்மையாலே
யாடல் கூர்மயிலு கந்த கந்தனென—வெண்ணில்சீரோ
னான மாயனென விங்கி லங்குபுக—முன்னலாரோ
சேட னாதியர்தி னந்தி னம்புகழ்—வண்மையானே



சேனு லாவியப தங்க னுஞ்சசிபு—நண்ணும்வாழ்வே
கூடன் மாநகரி யின்க ணான்றொருரை—சொன்னதேவே
கோடி கோடிவடி வங்கொ ளும்பழய—புண்ணியோனே.

## நாடகத்தமிழ்—கீர்த்தனை.

இராகம்—சுருட்டி. தாளம்—ரூபகம்.

பல்லவி

புண்ணிய மேவடி வாகி விளங்கிய
பொதியமாமலையே.

அநுபல்லவி

எண்ணியவா றுமகிழ்ந் தடியாருட
னென்றைக்குனைக்கண் டிருகரங்கூப்புவேன் (புண்ணிய)

சரணங்கள்

கும்பமுனிவனைக் கண்டுதொழும்புகழ்
கொள்ளக்கருதிக் குலைவதுபொய்யல்ல
நம்பனைத்தமிழ் கொண்டுதுதித்திடு
நல்லோராமவ ரெல்லோருஞ்செய்த (புண்ணிய)

தாம்பிரவன்னியைச் சந்தனச்சோலையைத்
தண்டமிழ்வாரியைத் தந்துமகிழ்ந்துபின்
பாம்பினைப்போன்ற மதனுக்குத்தேரும்
படைத்ததுகண்டுனைப் பாடுகின்றேனருட் (புண்ணிய)

நீதருமுத்தமிழ் பாடியதாற்பலர்
நித்தியவீட்டி னிலைத்தனரென் றுணர்ந்
தாதரவாற்றுதி செய்யுமெனைத்தொடர்ந்
தாளவல்லாருன் னத்தினிலில்லையோ (புண்ணிய)

---

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

186924

உ

# கரிகாற் சோழன்.

மஹாமஹோபாத்தியாயர் மறைத்திருவாளர்
உ. வே. சாமிநாதையர் அவர்கள்.

கரிகாற் சோழனுடைய புகழைப் பல புலவர்கள் பாடியிருக்கிறார்கள். அவன் இளமையிலேயே அரசுரிமை பெற்றான். ஒரு சமயத்தில் தீப்பற்றிய ஒரு வீட்டிலிருந்து ஓடும்போது அவன் கால் வெந்துபோய்விட்டது. அதனாலேதான் கரிகாலன் என்ற பெயர் அவனுக்கு வந்தது. இமயத்தில் அவன் புலிக்கொடியை நாட்டினதாகச் சொல்லப்பட்டிருக்கிறான். கால் வெந்திராவிடின், திருமாலைப்போல் மூவுலகையும் அவன் அளந்திருப்பான் என்று புலவர் ஒருவர் அவனுடைய வீரத்தை,

"முச்சக் கரமு மளப்பதற்கு நீட்டியகால்"

என்ற செய்யுளால் பாராட்டியிருக்கிறார். கரிகாலனுடைய பேரறிவை ஒரு சரித்திரம் உணர்த்துகிறது. ஒரு சமயம் அவன் நியாய சபையில் இருக்கையில் வழக்குரைத்துக்கொள்ள இருவர் வந்தனர். என்ன வழக்கென்று அரசன் கேட்டபோது, அவன் இளையவனாக இருந்ததைக் கண்டு அவனிடம் வழக்கைச் சொல்ல அவர்களுக்குத் துணிவு உண்டாகவில்லை. அதனை அறிந்த கரிகாலன், நீதிபதி சீக்கிரம் வந்து விடுவார் என்று சொல்லிவிட்டு அப்புறம் போய் ஒரு முதியவன்போல் வேஷம் போட்டுக்கொண்டு நீதிமன்றத்துக்கு வந்து சேர்ந்தான். அப்போது வழக்காளிகள் தம் வழக்கைத் தெரிவித்துக் கொண்டனர். அவன் நியாய விசாரணை செய்து தீர்ப்பளித்தான். கேட்டு அவர்கள் மகிழ்ந்து சென்றனர். இச்சரிதம்,

"இளமை நாணி முதுமை யெய்தி
உரைமுடிவு காட்டிய உரவோன்"

என்னும் மணிமேகலைப் பகுதியாலும்,

"உரைமுடிவு காணான்"

என்னும் பழமொழிச் செய்யுளாலும் வெளியாகின்றது.

தன்னியல்பைப் பாராட்டிக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப்பாலை யென்னும் நூலைக் கேட்டு அப்புலவர்க்குக் கரிகால்வளவன் பதினாறு லக்ஷம் பொன் பரிசளித்தான்; இது,

"தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தொ டாறுநூ றாயி ரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்"

என்னுங் கலிங்கத்துப் பரணியால் விளங்கும்.

உ

# ஆலயப் பிரவேசம்.

(திருவாளர். கா. ராஜமாணிக்கப் பிள்ளை அவர்கள்)

பாரதகண்டம் தன்னரசு வகிக்குங்காலம் என்றோ என்ற ஏக்கம் காந்திக்கு நிரம்பவுண்டு. அப்பொருட்டு அவர் செய்யும் முயற்சிகள் பல. அவற்றுள் தீண்டாமை யொழிப்பும் ஒன்று. தீண்டாமைக்கும் சைவவைஷ்ணவ முதலிய இந்நாட்டுப் பழைய மதங்களுக்கும் சம்பந்தம் அதிகம். நாட்டுமோகங்கொண்ட காந்திக்கு அம்மதங்களில் ஆசை கிடையாது. ஆகையால், தீண்டப்படாத சமூகங்களைச் சிவன் விஷ்ணு முதலிய தேவாலயங்களிற் புகவிடவேண்டும்; அதுவே தீண்டாமையை யொழிக்கும் என்று அவர் இப்போது பேசுகின்றார். தீண்டப்படாதாரின் ஆலயப்பிரவேசம் பொருத்தமா? அன்றா? வென ஆராயும் அவகாசம் இந்நாட்டிற்கு இப்போதில்லை. எங்குஞ் சுயராச்சியமோகமே மக்களை வாட்டுகின்றது. படித்தவரென்பாருட் பலர்க்குத் தேசீயமே பழக்கம். பொதுஜனங்கட்கும் அவர்களே அறிவுடையார். மதசாத்திர விற்பன்னர் அருவருக்கப்படுகின்றனர். காந்தி முன்னொரு சமயம் தமது தென்னாட்டு யாத்திரையில் கோயில்களைக் குச்சுக்காரி வீடென்றார். எல்லாரும் சபாஷ் என்று மெச்சினர். ஒருவராவது அப்பெரியாரைப் பார்த்து, "ஐயரே! ஆலயங்களைச் சீர்செய்ய விரும்புவதாகக் கூறும் நீவிர் அவற்றிற் காணப்படுங் குறைகளைக் கொஞ்சமும் அஞ்சாமற் சொல்லிவிட்டீர். அவற்றின் பெருமையையுஞ் சேர்த்துப் பிரஸ்தாபிக்குங் கடப்பாடும் உமக்குண்டன்றோ? ஆயின், ஆலயங்களின் தத்துவமென்ன? சிவலிங்கத்தின் தாற்பரியம் யாது? தக்ஷிணாமூர்த்தியின் கைமுத்திரைக்குக் கருத்தென்ன? சுவாமிக்குக் கலியாணமேன்? ஏகாதசி விரதம் எற்றுக்கு? பெருமாளுக்கு நாலுகை வேண்டுமா?" என்றின்னோரன்னவற்றைக் கேட்டுத் தெரிந்ததுண்டா? வெருவிக்கிடந்த தமிழகம் வாயைத் திறக்கவேயில்லை. அதுமாத்திரமன்று. பத்துப் பதினைந்து வருடம் பயின்றும் மாதம் பத்து ரூபாதானுஞ் சம்பாதிக்க வகையற்ற வக்கீல்கள் பன்னூறுபேர். எழெட்டாண்டு படித்தும் வெள்ளையர் செய்து இந்தியாவுக்கு அனுப்பிய மருந்துகளை விற்றுக் கொடுப்பதற்கும் வகையற்ற வைத்தியர்களும் அப்படியே. காமட்டி புரத்திற் கண்டெடுத்த கற்றாணும் மடமட்டிப் புரத்திற் கழுவியெடுத்த செப்பேடும் ஒத்து நடக்கின்றன: ராமனுக்குச் சீதை மனைவியென்று வான்மீகர் சொன்னது தப்பென்றே அதனால் யூகிக்கவேண்டி யிருக்கின்றது: பின்னை அவ்விருவர்க்கும் முறைதான் எதுவா யிருக்கலா மென்றாலோ, அவ்விஷயம் முழுமட்டிபுரத்தில் வெட்டி

யெடுக்கும் எலும்புக் கூடுகளைக் கொண்டுதான் நிச்சயிக்கவேண்டும் என்றெழுதிப் புத்தகங்களைப் பெருக்கவல்ல சரித்திரக்காரர்களும் அங்ஙனமே. இந்த வக்கீல், டாக்டர், சரித்திரக்காரர்களும், இவர் போன்ற பிறரும் மத விஷயத்தில் துணிந்து தீர்ப்புச்சொல்வர். அதுமட்டு மன்று. மதம் என்ற பதம் செவியிற் பட்ட மாத்திரத்தில் கொழுத்துத் திரிவது என்பதுதான் அதன் கருத்து எனப் பறகாட்டித் திரிவாரும் பலர். கடவுளாவார் சிவனா விஷ்ணுவா அல்லாவா ஏகோவாவா என்ற ஆராய்ச்சியே மடமை:மதவெறியர்களே அதிலகப்பட்டு மடிவார்கள்: அப் பெயர்களெல்லாம் ஒரேவஸ்துவுக்குரியனவே. அவ்வஸ்துவை மண்ணாங்கட்டி யென்று சொன்னாலும் புத்திசாலிகள் தப்பில்லை யென்பர்: என்னும் இச்சோம்பேறி ஞானம் சர்வ வியாபகம். தீண்டப்படாதாரின் ஆலயப் பிரவேசப் பிரசாரத்துக்குக் காந்தி இந்த நல்ல சந்தர்ப்பத்தைத் தப்ப விடுவாரா? எது எப்படியேனும் ஆகட்டும். கோவில் நுழைவுக்கு அவர் கூறுங்காரணங்கள் தம்மளவில் அறிவுக்குப் பொருந்தாமை சிறிது காட்டுதும்.

தீண்டப்படாதாரும் இந்துக்கள்தான்: ஆகையால், ஆலயப் பிரவேசவுரிமை மற்ற இந்துக்களுக்குப் போன்று அவர்களுக்கும் உண்டு என்கின்றார் காந்தி; இதுவரையும் அப்பிரவேச மில்லாத தீண்டப்படாதாரை இந்துக்களல்லரென்று எந்த வுயர்சாதியானுஞ் சொன்ன தில்லை. தீண்டப்படாதாரும் தம்மை வேறு யாரோவென் றெண்ணியது மில்லை. இருதாரத்தாரும் தம்மை இந்துக்க ளென்றுதான் அங்கீகரித்துள்ளார். ஆலயப்பிரவேசஞ் செய்யுங் கூட்டத்தாருந் தம்முள் கர்ப்பக்கிருகத்தில் இவர்தான் புகலாம், அடுத்த கிருகங்களில் இவரிவர்தான் நுழையலாம் என்று விதிகள் கண்டு அவற்றிற் கமைந்து வாழ்வது கண்கூடு. கர்ப்பக் கிருகத்திற் புகக்கூடாது என்று விலக்கப் பட்டார் மிகுந்த கௌரவ புத்தியோடு அவ்விலக்கை ஏற்கின்றனர். இக்கௌரவ புத்தி தீண்டப்படாத சமூகத்திலு முண்டு. அவர்களுக் கென்றே கோயில்களிற் கொண்மூ வளாவிய கோபுரங்களும் உத்ஸவ விசேடங்களும் உளவாயின. காந்திக்கு அவ்வுண்மை தெரியாது. ஆகலின், அவரும் அவரினத்தாரும் தீண்டப்படாதார்க்கும் ஏனையோர்க்குமுள்ள மதப் பொதுமையைக் காட்டி மதங்களின் சிறப்பொழுக்கங்களைச் சேதிக்கப் பார்க்கின்றனர். இசுலாமியரும்,இந்தியர்,ஆஸ்திகர், கிறிஸ்தவரும் அப்படியே. இந்துக்களுக்கும் அவ்வாறே. இந்தியம் ஆஸ்திகம் என்னுந் தேசப் பொதுமை மதப் பொதுமைகளைப் பற்றிக் கொண்டு இசுலாமியருங் கிறிஸ்தவரும் இந்துக் கோவில்களில் வரவும், அங்குள்ள சிலைகளைத் தொடவும் முனைந்தால் காந்தி சம்மதிப்பாரா? மாட்டாராயின் என்?

தாழ்சாதியோடு உயர்சாதி அளவளாவவேண்டும்; இல்லாவிடில் தாழ்சாதி தன் தாழ்வினின்றும் விலகி உயரமாட்டாது என்கின்றார் காந்தி.



எல்லாச் சாதிகளும் அளவளாவுமிடங்கள் பல. அவற்றுள் கள்ளுக்கடை, காப்பிக்கடை, விபசாரிவீடு, உத்தியோகசாலை முக்கியமானவை. இவ்விடங்களில் தாழ்சாதியோடு உயர்சாதி அடிக்கடி அளவளாவி அடைந்த லாபம் என்ன? ஒருவன் வாய்வைத்துச் சப்பிய கிண்ணியை மற்றவனும் வாய்வைத்துச் சப்பத்தான் படித்தான். அண்ணாந்து சாப்பிடுகிறவன் சாப்பிடத் தெரியாதவனே என்ற பேச்சும் பிறந்தது. நல்லவன் கெட்டவனாதல் எளிது. கெட்டவன் நல்லவனாதல் அரிது. ஆகையால், நல்லவனுங் கெட்டவனுங் கலந்தால் நல்லவனே விரைவில் மாறுவான். இன்னும், தாயைத் தங்கையைத் தமக்கையை மருமகளை மகளை அறுதலியை மூத்தவளைப் பூத்தவளைப் பலரை மணந்து மகிழுஞ் சமுதாயங்கள் எத்தனையோ விருக்கின்றன. அத்தனையும் அளவளாவினால் கலியாணம் என்பதுதான் எற்றுக்கு? இக்காலத்தில் உயர்சாதியாரிலும் பெரும்பாலோர் கலியாணத்தின் தாற்பரியத்தை மறந்து வருதற்குக் காரணம் சகவாசதோஷமே. ஒரு ஆசாரத்தைக் காண்பதும் அநுட்டிப்பதும் சாமானியமல்ல. பலகாலப் பயிற்சிவேண்டும். அப்பயிற்சியாற் கைவந்த ஆசாரமும் நழுவ நானூறு இடையூறுகள் நேரும். ஒரு ஆசாரம் ஒரு சாதிக்குப் பிதிரார்ஜிதம். தாற்காலிகமாகவோ சார்வகாலிகமாகவோ அதனைமாற்ற அந்தச் சாதியிற் பிறந்த எவனுக்கும் அதிகாரமில்லை. ஆகவே, உயர்சாதி தன் ஆசாரத்துக்குக் கேடு நேராதபடி தாழ்சாதியைக் கவனிப்பதில் யார்க்கும் ஆசைதான். சைவவைஷ்ணவ மதங்களில் அதற்கிடமுண்டு. உற்சவமுதலிய காலங்களில்மட்டும் தீண்டாமையையொழிகஎன்னும் விதி அவற்றிற்காணப்படும். மாமிசபக்ஷணிகள் சாகபக்ஷணிகளோடு அடிக்கடி அளவளாவியும் மாமிசபக்ஷணத்தை வெறுத்தனரா? இக்காலை இந்தியாவுக்கு ஆசாரிய பூஷணமாய் விளங்கும் இங்கிலாந்து இந்தியாவோடு பழகியுங் கட்குடியை வானமளாவப் புகழ்கின்றது. அதனால் எத்தனை உயர்சாதி மக்கள் சுள்ளைக் கடித்துக் கள்ளைக்குடித்துத் திரிகின்றனர்?

தீண்டப்படாதவருக்குத் தீண்டாமை அவமானந் தருகிறது என்கின்றார் காந்தி. சிறிது காலத்துக்கு முன்வரையும் தீண்டாமையை அவர்கள் அவ்வாறு நினைத்ததில்லை. ஆனால், இப்போது ஆங்காங்குச் சிலர் நினைப்பது வாஸ்தவம். அதற்குக் காரணம் 'நலத்தின்கண் ணாரின்மை தோன்றின் அவனைக், குலத்தின்கண் ஐயப் படும்' என்ற பொய்யாமொழிக்கிலக்கிய மாவார் சிலரது தூண்டுதலே: குஷ்டரோகியை யாருந்தீண்டார். அத்தீண்டாமை அவ்ரோகிக்கு அவமானந்தாதா? நூற்றுக்குத் தொண்ணூறு பிணியர் அத்தீண்டாமையைத் தமக்கவமானமாகக் கருதுவது பலர்க்கும் அநுபவம். தீண்டினவரை நோய் ஒட்டிக்கொள்ளுமென்று எல்லா அறிஞருஞ் சொல்லவுமாட்டார். கங்கை பரிசுத்த நதி. அதைப் பல அபரிசுத்த நதிகள்

வந்து தீண்டுகின்றன. அஃது அத்தனையையும் பரிசுத்தஞ் செய்கின்றது. தானும் அபரிசுத்தமாவதில்லை. அப்படியே உரோர்கி தீண்ட அரோகி இடங்கொடுத்தால் உரோகி அரோகியாவான். அரோகியும் உரோகியாகான். இக் கங்கைத் திருட்டாந்தத்தை ஆலயப்பிரவேசத்துக்கு எடுத்தாண்ட மாளவியாவும் நம்மை யாதரிக்கின்றார். அப்படி யெல்லாமிருந்தும் உரோகியின் மானத்துக்கஞ்சி அரோர்கி அவனைத் தீண்டவேமாட்டான். பொதுநலங் கருதும் உரோகியோ அரோகியினின்றும் விலகி வாழ்வதையே தனக்குப் பெருமையாகக் கொள்வான். தீண்டப்படாதாருள்ளும் அத்தகைய நல்லோர் பல்லோருளர்.

தீண்டப்படாதாரின் பிரவேசமில்லாத கோயில்களிலுள்ள விக்கிரகங்களில் கடவுள் இருக்கமாட்டார் என்கின்றார் காந்தி. காந்தி இப்போதோ விஷ்ணுவின் அவதாரமெனக் கருதப்பட்டுவிட்டார். ஆனால், அவ்வவதாரம் தசத்திற் சேரவில்லை. ஒருக்கால் அஃது அமுக்கியம்போலும். அவ்வவதார மூர்த்தியின் அநுக்கிரக விசேடத்தால் வடநாட்டிற் சில கோவில்களில் தீண்டப்படாதார்க்குப் பிரவேசங்கொடுக்கப்பட்டதெனச் சொல்லப்படுகின்றது. அங்குள்ள விக்கிரகங்களில் கடவுள் திண்ணமாய் வந்திருக்க வேண்டும். காந்தி அவரைக் கண்டாரா? அவரோடு பேசினாரா?

தீண்டப்படாதார் போகக் கூடாதென்று சில கோவில்களில் சாதனங்கள் பூர்வ காலத்திலேயே ஏற்பட்டிருக்கின்றன. தருமகருத்தர்கள் அவற்றை மீற முடியவில்லை. ஆகையால், முதலில் அச் சாசனங்களை யழிக்கவேண்டும் என்கின்றார் காந்தி. எந்தப் பொதுவுடைமையும் அது சம்பந்தமான தஸ்தாவேஜியிற் கண்ட ஷரத்துப்படிதான் பொதுவாகும். பிரதிவாதியின் தஸ்தாவேஜிகளையெல்லாம் நெருப்புவைத்துவிட்டு அவனுடைமையைத்தான் பிடுங்கிக்கொள்ளவோ பிறற்குப் பிடுங்கிக் கொடுக்கவோ முயலும் வாதி நீதிமானாவானா? சாத்வீக எதிர்ப்பு இதுதான் போலும். ராமரும் பரசுராமரது வில்லை வாங்கிக்கொண்டு நிராயுதபாணியாய் நிறுத்தித்தானே முறியடித்தார்?

கடவுளாற் படைக்கப்பட்ட மக்களுள் சில்ருக்குமட்டும் அக் கடவுள் முன்செல்ல ஏன் அநுமதியில்லை என்கின்றார் காந்தி. அப்படிச் சொல்வார் எவருமிலர். கோபுரசந்நிதியுங் கடவுள் சந்நிதிதான். விழாக்காலத்தில் வீதி வலம்வரும் விக்கிரகங்களின் சந்நிதியுங் கடவுள் சந்நிதிதான். ஆண்டு யாருங் கடவுளை வணங்கலாம். இன்னும், கடவுள் சந்நிதியல்லாதவோரிடமும் கடவுள் சிருஷ்டியல்லாதவொரு பொருளும் உலகிலில்லை. அதுவே காரணமாக எந்தப் பொருளையும் எந்த இடத்திலும் நுழைக்கலாமா?



தாழ்சாதியிற் போன்ற அநாசாரமுடையார் உயர் சாதியில் இலரா? அவருக்கிருக்கும் உரிமை தாழ்சாதியில் ஆசாரமுடையார்க்கு மில்லை யென்கின்றனரே! இஃதென்ன நியாயம் என்கின்றார் காந்தி. பாரத தேசம் புண்ணிய பூமி. மேலைத் தேசம் மிலேச்ச தேசம். புண்ணிய பூமியில் பாவியரும் மிலேச்ச தேசத்தில் புண்ணியரும் உளர். இப் பாவியரை அங்கு ஓட்டிவிட்டு அப் புண்ணியரை இங்கு அழைத்துக் கொள்ளக் காந்தியாலும் முடியாது. இப்பாவிகளை இங்குவைத்தே திருத்தவும் அப் புண்ணியரை அங்குவைத்தே மகிழவும் வேண்டும்.

யாரையுங் கோயிலுட் புகவிடுமுரிமை தர்மகர்த்தாக்களுக்கு உண்டு: ஆகலின், முதலில் அவர்களை இப் புதுக்கொள்கைக்குத் திருப்பவேண்டும் என்கின்றார் காந்தி. தர்மகர்த்தர்க ளெல்லாருந் தனவந்தர். ஆனால், மதசாத்திர ஆராய்ச்சியுடையார் அவருள் நூற்றுக் கொருவரோ இருவரோ தானிருப்பர். அந்தக் கணக்கும் ஒருகாரணத்தை முன்னிட்டதே. மேலும், கிறிஸ்தவ மகமதியர்களும் இந்துக்கோவில்களுக்குத் தர்ம கர்த்தராகலாமென அரசாங்க விதியுமிருப்பதாகத் தெரிகிறது. தர்மகர்த்தராய் வருவார்க்கு மதநூலாராய்ச்சி யநுஷ்டானங்கள் அநாவசியம் என்பதை அதனாற் காண்க. ஆகவே, தர்மகர்த்தர்கள் காந்தியின் புதுக் கொள்கை மோகத்தில் அகப்படுவது எதிர்பார்க்கத் தக்கதுதான். இந்து தர்மகர்த்தர்கள் அக் கொள்கைக்கு இணங்கிவாராவிடில், மகமதியர் கிறிஸ்தவர் முதலிய அந்நியமதஸ்தர்களை எல்லாக்கோவில்களுக்குந் தர்மகர்த்தர்களாக்கி அவர்களைக்கொண்டு தீண்டப்படாதார்க்கு ஆலயப் பிரவேச அநுமதி வாங்கிக் கொள்ளவும் காந்தி முயலலாம்.

எல்லா மதக்கோவில்களிலும் சமத்துவமிருக்கின்றது: இந்துமதக் கோவில்களில் மட்டும் அஃது ஏன் கூடாது என்கின்றார்காந்தி. கிறிஸ்தவ மகமதிய மதப்பிரசாரகர் அதேகாரணத்தைக்காட்டி இந்துக்களில் ஒருசிலரைத்தான் இதுவரைத் தம்மதத்தி விழுத்திருக்கின்றனர். ஆனால், இப்போது காந்தி அம்மதங்களிலுள்ள கொள்கைகளுட்பலவற்றை இந்து மதத்திலேயே நுழைக்கவும், அதன் பலசிறப்புக்கொள்கைகளை யொழிக்கவும் பார்க்கின்றார். அதனால், காந்தியின் இந்துமதம் பிரச்சன்ன கிறிஸ்தவ மகமதிய மதங்களாகிறது. எல்லா இந்துக்களும் கிறிஸ்தவ மகமதியராகின்றனர். இந்து சமூகம் காந்திசெய்யும் பாதிரித்தொழிலைக் கவனித்திடுக. இச்சமத்துவத்தை ஆதியிற் பிரசங்கித்தவர் பாதிரிமார். கேட்டுமகிழ்ந்தவர் பஞ்சமர். இப்போது பிரசங்கிப்பவர் காந்தி. கேட்டு மகிழ்பவர் பிரதமர் முதலிய நால்வர். இந்துசமூகம் எவ்வளவு இறங்கிவிட்டது? பாருங்கள்.

தீண்டப்படாத இந்துவொருவன் மகமதியனால் கோவிலுக்குள்சில தூரமாயினும் வருகிறான்: அவன் இந்துவாகஇருக்கும்போது அதில் தலை நீட்டவுங்கூடாது: இது நியாயமா? என்கின்றார் காந்தி. மகமதியர்களையும் மற்றவர்களையுங் கோவிலுள் விடவேண்டுமென்பது இந்துமதவிதியா? மகமதியர்களைக்கண்டு நடுங்குஞ்சுபாவம் இந்துக்களுக்குண்டு. அந்நடுக்கமே அச்செலவுக்குக் காரணம். நடுக்கத்தால் நடக்கும் ஒன்றை விதிசெய்தும் நடத்தலாம் என்பது தப்பு. ஆகலின், உண்மை இந்து நடுக்கத்தைப் போக்கி மானத்தைக் காத்துக்கொள்ளவே கடன்பட்டுளான். ஆண்மை அதைத்தவிர வேறென்னை?

தீண்டப்படாதார்க்கு ஆலயப்பிரவேசங் கொடுக்க வேண்டுமென்று இந்துப் பொதுஜனங்களெல்லாம் இப்பொழுது அபிப்பிராயங் கொடுத்துவிட்டார்கள்; இனித்தாமதமேன்? என்கின்றார்காந்தி. இந்துமதமென்னுந் தொடரே சிறிதும் பொருளற்றது. யாமும்விகாரார்த்தமே அப்பதத்தை அடிக்கடி சொல்லிவருகின்றோம். நாஸ்திகன், ஆரியசமாஜத்தான், பிரமசமாஜத்தான், பிரச்சன்னபௌத்தன் முதலிய எல்லாரும் தங்களை இந்துக்களென்கின்றனர். இவர்களுக்கு ஆலயவழிபாட்டில் நம்பிக்கை கிடையாது. ஆயினும், இந்துமதப் பொதுஜனங்களில் இவர்களும் அடங்குவர். ஆலயப்பிரவேசத்துக்குச் சம்மதி கொடுக்க இவர்கள் யார்? ஆலயவழிபாட்டில் அந்தரங்க அபிமானமுடையவர்க்குத்தான் எவ்வித அபிப்பிராமுங்கொடுக்க வுரிமையுண்டு. அத்தகையாருள் காந்திக்கநுசரணையாவார் எத்தனைபேர்? நூற்றுக்கொன்றிரண்டு அகப்படுவதுதானும் அருமை.

தீண்டப்படாதார்க்கு ஆலயப் பிரவேசசம்பந்தமாகக் காந்திகூறும் ஏனையவிகாரங்களையும் அறிஞர் இவ்வாறு ஆராய்ந்து சனாதனதர்மத்தைக் காத்துக்கொள்க.

# தீண்டாதாரும் செட்டிப் பிள்ளைகளும்.

25-10-32 செவ்வாய்க்கிழமை யன்று கொழும்பிலுள்ள நாட்டுக்கோட்டைச் செட்டிப்பிள்ளைகள், கொழும்பிலுள்ள தங்கள் கதிரேசன் கோயில்கள் இரண்டனுள்ளும் தீண்டாதாரைப் பிரவேசிக்க விடலாமோ என்ற விஷயமாக மகாசபை கூட்டி யோசித்து பக்கத்திலுள்ள முத்துவிநாயகசுவாமி கோவிலதிகாரிகள் அந்தக் கோயிலுள் தீண்டாதாரைப் போகவிட்டால் தாங்களும் அவர்களைப் போகவிடலாமென்று முற்றுச் செய்தனர்.

இந்த விஷயமாக, மேற்படி பிள்ளையார் கோவில் தருமகர்த்தாவாகிய ஸ்ரீ இரத்தின சபாபதியவர்களை 'டெயிலிநியூஸ்' பத்திரிகைப்



பிரதிநிதியொருவர் சந்தித்துப் பேசியபோது அவர் பின்வருமாறு கூறியுள்ளார்:—

'இந்த முத்துவிநாயக சுவாமி கோவில் இற்றைக்கு 75 வருடங்கட்கு முன்னர் முத்துச்சாமி நாயிக்கர் என்னுமொரு இந்திய தருமவானாற் கட்டுவிக்கப்பட்டது. அவர் காலத்திலேயே இவ்வாலயம் கொழும்பில் வசிக்கும் யாழ்ப்பாணத்தார் சிலரைத் தருமகர்த்தாக்களாக்கி அவர்கள் பரிபாலனத்தில் ஒப்புவிக்கப்பட்டது. எனது தகப்பனார் ஸ்ரீ நமசிவாயமவர்களின்பின் நானே சென்ற 50 வருடகாலமாக இந்த ஆலயத்தைப் பரிபாலித்துவருகிறேன். இக்கோவில் பொதுச்சொத்தல்ல. ஒருவருடைய சொந்தச் சொத்தாகும்; ஆனால், தீண்டாதார் உள்ளே போகும் விஷயத்தில் நான் ஊரவர்களுடைய சம்மதத்தையும் உசாவவேண்டும். அல்லாமலும் இங்கு வந்து வசிக்கும் யாழ்ப்பாணத்தவர்களே பெரும்பாலும் இவ்வாலயத்திற்குச் சுவாமி தரிசனஞ் செய்ய வருபவர்கள்; ஆனதால் யாழ்ப்பாணத்துள்ள பிரதான தலமாகிய நல்லூர்க் கந்தசுவாமிகோவில், ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோவில் முதலிய கோவில்களில் தீண்டாதாரை உட்பிரவேசிக்க விட்டாலன்றி நான் இங்கே இவர்களை விடுதல் முடியாது.

கொழும்பிலுள்ள தீண்டாதார் எல்லாரும் இந்தியர்கள்; இவர்களைக் கோவிலுக்குள் விடுதற்கு முந்தி எங்கள் நாட்டிலுள்ள தீண்டாதாரைப் பிரவேசிக்க விடுவதே முறையாகும். அல்லாமலும், தொன்றுதொட்டுவந்த இந்த ஆசாரத்தை நாங்கள் ஒருநாள் இரண்டு நாளில் அழித்துவிடுதல் முடியாது. அப்படி மீறிச் செய்வேனேயானால் என்பாடு, குளவிக் கூட்டில் கல்லெறிந்த விதமாய்த்தான் முடியும். அல்லாமலும், கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே கொள்கைகள் ஆசாரங்கள் விஷயத்திற் பெரும் வித்தியாசமுண்டு. கொழும்பிற் செய்யக்கூடிய சில கருமங்களை நைஷ்டிகர்கள் பலர் வாழும் யாழ்ப்பாணத்திற் செய்தல் முடியாது. கொழும்பிலே, டக்ரர் அம்பேட்கார் போன்ற தீண்டாதார் தலைவர் ஒருவரிருந்தால் "கோயிற் பிரவேச விஷயத்தில் எவரும் தடை சொல்ல மாட்டார்கள்; தீண்டாதாரை உட்பிரவேசிக்க விடாமல் ஆதியில் தடுத்தமைக்குப் பிரதான காரணம் அவர்களிடத்துள்ள அசுத்தமும் தீய செயல்களுமேயாம். அல்லாமலும், சாஸ்திரங்களும் இதற்குமாறாக விதித்துள்ளன. தீண்டாச் சாதியாரைக் காலகதியில் நன்றாய்ப் படிப்பித்து ஆசாரமுடையவர்களாக்கினால் ஒருபோது இது சாத்தியமாதல் கூடும். ஆனால், அந்தக்காலத்திலும் தென்னிந்திய பிரதான தலங்களாகிய சிதம்பரம், மதுரை (திருவாலவாய்) இராமேசுவரம் என்னும் தலங்களில் தீண்டாதாரைப் பிரவேசிக்க விடுவார்களோ என்பது சந்தேகம்.'

உ

# ஆப்த வாக்கியங்கள்.

(உயர்திரு ஆறுமுக நாவலரவர்கள்)

திருக்கோயிலினுள்ளே போதற்கு யோக்கியர்களல்லாத சாதியார்கள் திருக்கோயிற்புறத்திலே பிரதக்ஷிணம்பண்ணித் திருக்கோபுரத்தை நமஸ்கரித்துக் கடவுளைத்தோத்திரஞ் செய்யக்கடவர்கள்.

யாவராயினும், தங்கள் தங்கள் சாதிக்கு விதித்தவிதி கடவாது நின்று சிவனை வழிபடின் முத்திபெறுவர். அவ்விதிகடந்தோர் பயன்பெறார். திருநாளைப்போவார் நாயனார் தாம் முற்பிறப்பிற்செய்த புண்ணியமிகுதியினாலே சிவனிடத்து மெய்யன்பு உடையராகி, தாம் இழிவாகிய புலையர் குலத்திற் பிறந்தமையால், அதற்கு ஏற்பச் சிவனுக்குத் தொண்டுசெய்தலே முறைமையாம் என்று சிவாலயங்கள்தோறும் பேரிகை முதலிய ஒருமுகக் கருவிகளுக்கும், மிருதங்கம் முதலிய இருமுகக் கருவிகளுக்கும் தோலும் வாரும், வீணைக்கும் யாழுக்கும் நரம்பும், அருச்சனைக்குக் கோரோசனையும் கொடுத்தலும், ஆலயங்களின் திருவாயிற் புறத்தில் நின்றுகொண்டு ஆநந்த மிகுதியினாலே கூத்தாடிப் பாடுதலும் செய்தனர்.

பல சிவஸ்தலங்களுக்கும்போய் வணங்கித் திருப்பணி செய்தலே தொழிலாகக்கொண்ட இந்நாயனாருக்குச் சிதம்பர தரிசனத்திலே வேட்கை மிக்குற்றது. இவ்வேட்கையின் மிகுதி அது விளைந்த அன்றிரவு இவருக்கு நித்திரையின்மையானும், மற்றநாள் இவர் தாம் தில்லைக்குச் செல்லில், கோயிலினுள்ளே புகுதல் தமது சாதிக்கு இயையாது என்பது நினைந்து போகாதொழிந்தாராயினும், அவ்வாசை குன்றாது மேன்மேலும் வளர்தல்பற்றி நாளைப்போவேன் நாளைப்போவேன் என்று பலநாள்கழித்து, ஆசையை அடக்கல் கூடாமையால் பின் தில்லை எல்லையை அடைந்தமையானும் தெளியப்படும்.

இவ்வாறு மிக்க ஆசையுடன் சென்றும் தில்லையினுள்ளே வேதவிதிப்படி ஓமஞ்செய்யப்படுதலைக்கண்டு, உட்புகா தொழிந்து, இரவு பகல் திருவெல்லையை வலஞ்செய்து வணங்கினமையால் வேதாகம விதிக்கு அஞ்சி, சாதி நெறி கடவாது நின்ற இவரது பெருந்தன்மை துணியப்படும்.

சண்டாளருடைய நிழல்படினும், இழிந்த சாதியாரும் புறச் சமயிகளும், வியாதியாளரும், சனன மரணசௌசமுடையவரும், நாய், கழுதை, பன்றி, கழுகு, கோழி முதலியவைகளும் தீண்டினும், எலும்பு சீலை முதலியவற்றை மிதிக்கினும், க்ஷௌரஞ்செய்துகொள்ளினும், சுற்றத்தார் இறக்கக்கேட்பினும், துர்ச்சொப்பனங் காணினும், பிணப்புகைபடினும், சுடுகாட்டிற்போகினும், சர்த்தி (வாந்தி) செய்யினும் உடுத்த வஸ்திரத்துடனே ஸ்நாநஞ்செய்வது ஆவசியம். (இந்துசாதனம்)

---

உ

கணபதி துணை.

சங்கர நயினார் கோயிற்

# சங்கரலிங்க உலா

தலவிசேடம் முதலியன.

கலிவெண்பா.

1. பார்தந்த பூங்கமலப் பண்ணவனும் வென்றிதரு
போர்தந்த நேமிப் புரவலனும்—கார்தந்த

2. தந்தா வளம்பெறுபொன் னாடு புரந்தளிக்கும்
தந்தா வளப்பூந் தருவரசும்—முந்தார்வத்

3. தெள்ளிருக்கு முண்மைநிலை தேர்ந்திருக்கு மேன்மேலும்
உள்ளிருக்கு மன்பா லுகந்திறைஞ்ச—வெள்ளித்

4. தவளப் பொருப்புத் தனிலிருந்த முக்கட்
பவளப் பொருப்பைப் பரவிக்—கவுரியன்பு

5. நாட்டிய சங்கர நாரா யணர்வடிவம்
காட்டி யருளுகெனக் கண்ணுதலும்—மோட்டுலகில்

---

## குறிப்புரை.

1. நேமி-சக்கரம். புரவலன்-திருமால்.

2. தந்தாவளம்-யானை (ஐராவதம்). அரசு-இந்திரன் முந்து ஆர்வம்.

3. தெண்மைஇருக்கும்-தெளிவுபொருந்திய; மைவிகுதி பெற்ற பண்புப் பெயரில் பகுதிப்பொருள் விகுதியாகிய மையைநீக்கி முதனிலையோடு மொழிகளைச் சேர்த்துக் கூறுவதும் மரபு; "தண்ணார் திருமஞ் சனமாடி" (45)என்பர் பின்னும்;"வருந் துநாய் நாவிற் பெருந்தகு சீறடி"(பொருந.42); "கருவார் பொழில்", "கருவார்சோலை" (தே. பிரமபுரம், திருவாரூர்.) இருக்கும்-வேதமும். இருக்குமென்னும் பெயரெச்சங்கள் அன்பென்னும் பெயரைக்கொண்டு முடிந்தன.

1-3. பண்ணவனும், புரவலனும், அரசும், இருக்கும் இறைஞ்ச.

3-4. இறைஞ்சஇருந்த. கவுரி - உமாதேவியார். கைலையங்கிரியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைப் பரவி.

5. சங்கரரும் நாராயணரும் கலந்த திருவுருவம்: 6-7, 13, 6, 19, 34, 109, 142, 284-6-ஆங்கண்ணிகளைப் பார்க்க; "சீரேறு திருமாலோர்

6. மன்னிய புன்னை வனத்துளவோர் புன்னைநிழல்
தன்னி லிருந்து தவமியற்றின்—அன்ன
7. இருவடிவுங் காட்டுதுநா மென்றிசைப்பப் பச்சை
ஒருவடிவம் பெற்ற வுமைமான்—மருவிரிபூங்
8. காவாகிப் பூவுங் கனியு மளிப்பதற்கும்
கோவாகித் தீம்பால் கொடுப்பதற்கும்—ஆவுடைய
9. கோதையெனத் தன்னைமங் கூறுதற்கும் வானோரும்
மாத ரரம்பையரும் வம்மினெனா—மேதினியில்
10. தெய்வ மகளிரொடுந் தேவர் குழாத்தோடும்
அவ்வனத் தேகி யமர்ந்தருளிச்—செவ்விபெற
11. மன்றல் கமழ்குவளை வான்சுனையை வானோர்கள்
அன்று திருத்தி யருகமைப்ப—ஒன்றிய

---

பாகத்தான்காண்'', ''திருமாலோர் பங்கத்தான்காண்'' (தே. திருவாரூர், திருப்புத்தூர்); ''தாழ்சடையு நீண்முடியு மொண்மழுவுஞ் சக்கரமும், சூழரவும் பொன்னாணுந் தோன்றுமால்-சூழும், திரண்டருவி பாயுந் திருமலைமே லெந்தைக், கிரண்டுருவு மொன்றா யிசைந்து'' (திவ். மூன்றாந்திருவந்தாதி, 63.) என-என்று உமாதேவியார் விண்ணப்பம் செய்ய.

4-5. கவுரி பரவி அருளுக என.

6. புன்னைவனம்-இத்தலத்தின் பெயர்; புன்னை, தலவிருட்சம்; 18, 29, 31, 137, 143, 149, 162, 204, 214, 266, 283-4, 312-ஆம் கண்ணிகளைப் பார்க்க.

7. காட்டுதும்-காட்டுவேம். கண்ணுதல் (5) காட்டுது மென்று இசைப்ப (7.) பச்சை வடிவம் பெற்ற உமை: 118, 163, 183.

8-9. ஆவுடைய கோதை:பசுக்களையுடைமையால் அம்பிகை ஆவுடையநாயகியென்று திருநாமம் பெற்றனள்; இது வடமொழியிற் கோமதியென வழங்கும்; 30, 43, 104, 143, 163, 284, 303.

7-9. உமைமான், பூவுங் கனியுங் கொடுப்பதற்குக் காவாகும்படி தேவரையும், அபிஷேகத்திற்குப் பால் கொடுப்பதற்கும் ஆவுடையநாயகியென்று தம்மைக் கூறுதற்கும் பசுக்களாகும்படி அரம்பையரையும் வம்மினென்று கட்டளையிட்டு.

10. அவ்வனத்து - மேற்கூறிய புன்னை வனத்திற்கு. அமர்ந்து - விரும்பி எழுந்தருளியிருந்து.

11. அங்கே உள்ள ஒரு சுனையைத் தேவர்கள் திருத்தி யமைக்க. ஒன்றிய - ஒன்றுபட்ட. வந்தனைசெய்து - வழிபட்டு; அம்பிகை வழிபட்டது,



12. சிந்தனை கூர்ந்து தவஞ் செய்து நெடுங்காலம்
வந்தனை செய்து வருநாளில்—எந்தை
13. ஒருபாற் புலித்தோ லுடைதயங்க மற்றை
ஒருபாற்பொன் னாடை யொளிர—ஒருபால்
14. மழுவு மொருபால் வளையுந் துலங்கத்
தழுவு முருவமைந்த தானே—ஒழுகுமொளி
15. கான்ற விருவடிவுங் காணத்தா னோர்வடிவிற்
றோன்றியருள் செய்யத் தொழுதாங்கண்—ஆன்ற
16. பழைய வுருவின் படியுறைய வென்ன
அழகுதர நாளு மமர்ந்தோன்—முழுதும்
17. நிலைமைபெறு மெய்ப்பொரு ளேமியான் செங்கைக்
கொலைமழுவா னென்றுதம்மிற் கூறும்—மலைவொழியத்
18. தாமேவிச் சங்கபற்ப ரென்னுந் தடநாகம்
தேமேவு புன்னைவனஞ் சென்றுதொழப்—பூமேல்
19. இருவுருவு மொன்றா யிறைவிக் களித்த
இருவுருவங் காட்டியருள் செய்ய—இருநிலத்தோர்

---

''நீடுபுன்னைக், காவைநே சித்துவந்த கண்ணுதலை யாவுடைய, பாவைபூசித்த படிபாரீர்'' (283-4) என்பர் பின்.

அமர்ந்தருளி(10),கூர்ந்து தவம் செய்து வந்தனைசெய்து வருநாளில்(12.)

13. பொன்னாடை—பீதாம்பரம்; இது திருமாலுக்குரியது; ''பொன்புனை யுடுக்கையோன்'' (பரி. 15:8); ''பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய, செங்க ணெடியோன்'' சிலப். 11:50-51.

15. இருவடிவு - சங்கரநாராயணர் வடிவம்.

16. என்ன - என்று ஆவுடைநாயகி விண்ணப்பம் செய்ய.

18. சங்கபற்பர்-சங்கன், பத்மனென்னும் மகாநாகர் இருவர்; 20-21, 33, 140, 286; பற்பர்-பத்மர்;''பற்பநாபன்''(எதுகை) திருவாய்மொழி, 2.7:11.

17-9. உண்மைப் பொருள், சிவபெருமானென்றும் திருமாலென்றும் தம்முள் மாறுபட்டு வாதித்துக் கொண்டிருந்த சங்கன், பதுமனென்னும் மகாநாகர் இருவரும் வியாழ பகவானது ஏவலால் இங்கேவந்து தவஞ்செய்ய இருவரும் ஒருவரென்பது அவர்களுக்குப் புலப்படும்படி செய்தற்குச் சிவபெருமான் முன்பு ஆவுடை நாயகிக்குக் காட்டிய சங்கரநாராயணத் திருவுருவைக்காட்டி யருளினரென்பது இத்தலபுராண வரலாறு.

20. தங்களுக்கு வேண்டுவன தந்தளிக்க நல்லாரும்
அங்கவர்க்கு முத்தி யருள்வாரும்—எங்களுக்கு

21. மெய்ப்பொருளு மெய்ம்மை விரும்பிப் பணிபவருக்
கெப்பொருளு மீக வெனவளித்தோன்—ஒப்பிலாப்

22. பண்டா ரணைந்தோர் பராசக்தி சாபத்தாற்
சண்டாள னானவிண்ணோன் றானுணர்த்தக்—கண்டாய்ந்து

23. செம்பொற் றட வரையிற் சேல்பொறித்த வேந்தமைத்த
அம்பொற் சினகரத்து ளன்றமர்ந்தோன்—வெப்பவங்கள்

---

21. என-என்று சங்கபற்பர் வரம் கேட்ப.

22. பராசக்தி-அம்பிகையின். விண்ணோன்-மணிக்கிரீபனென்னும் தேவன்; "மலைமகள் சாபந் தன்னாற் புலையனா மணிக்கி ரீபன்", "பொருப்பிளங் கன்னி சாபம் பொருந்தலாற் புலைய னாகி, மருத் துணர் விரிந்த புன்னை வனத் துறை மணிக்கி ரீபன்" சங்கர. புராணம், உக்கிரன் வழிபடுசருக்கம், 23, 36.

23. வேந்து - உக்கிரபாண்டியன். கொற்கையை இராசதானியாகக் கொண்டு அரசாண்ட உக்கிரப் பெருவழுதி யென்னும் அரசன் நாள்தோறும் திருவாலவாய் சென்று ஸ்ரீ சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்து வரும் நியம முடையவன். ஒரு நாள் தரிசனம் செய்தற்கு இத்தலத்தின் வழியே செல்லுகையில் அவன் ஏறி வந்த யானை கீழே விழுந்தது. அப்பொழுது அரசன் ஒன்றும் தெரியாமல் திகைத்து நிற்கையில் மேற்கூறிய மணிக்கிரீப னென்பவன் வந்து பணிந்து, "அரசே, அடியேன் இவ்வனத்தைத் திருத்திக் கொண்டிருப்பவன். ஒரு புற்றை வெட்டுகையில் அவ்வெட்டினால் வாலற்றுப்போன பாம்பொன்று மேலே தோன்றியது. அதனைப் பரமசிவனுடைய திருவுருவமென்றே எண்ணுகிறேன்" என்று சொன்னான். அரசன் அங்கே சென்று பார்த்துக்கொண்டுநின்று, "மதுரைக்குச்செல்ல முடியவில்லையே" என்று வருந்தியபொழுது, "அரசே, நீம் துரை சென்று அலையவேண்டாம்; அங்கயற்கண்ணியோடும் ஆலவா யமர்ந்த அண்ணல் இங்கு எழுந்தருளியிருக்கின்றார். இவ்விடத்திலேயே தரிசனம் பண்ணிக்கொள்ளலாம்" என்று ஓர் அசரீரி உண்டாயிற்று. உடனே அவன் புன்னை மரத்தின் நிழலிற் புற்றினருகே ஒரு சிவலிங்கம் இருக்கக் கண்டு தரிசனம் செய்துகொண்டு திருக்கோயில் முதலியவற்றை அமைத்து அங்கே வாழ்ந்து வந்தனனென்பது இத் தலபுராண வரலாறு; இதனை உக்கிரன் வழிபடு சருக்கத்தால் அறியலாகும். கண்ணி, 110, 287 பார்க்க.



24. ஆற்றி யறுதொழிலோ னன்றெடுத்த பெண்சனனம்
மாற்றியுயர் முத்தி வழங்கினோன்—போற்றும்

25. மறையோன் பொருளதனை வவ்வியபூம் பொன்னிக்
கிறையோன் பிணிதீர்த்த வெங்கோன்—குறையாத

26. வண்மைப் பொதியவரை மாமுனிக்கோ ரஞ்செழுத்தின்
உண்மைப் பொருளை யுணர்த்தினோன்—தண்ணங்

27. கடிகமழ் கற்பகப்பைங் காவேந்தன் மைந்தன்
கொடியுருவ மாற்றுங் குழகன்—படிமிசையில்

---

24. பிராமணன் ஒருவன் தன் மனைவியைப் புறக்கணித்த தீமையால் மறுபிறப்பில் தக்கனை யென்னும் பெண்ணாகப் பிறந்து காலப முனிவரேவலால் இத்தலத்தை அடைந்து தவம் செய்து பின்பு அந்தப் பிறவி நீங்கப்பெற்று முத்தியும் பெற்றான். இந்த வரலாறு இத்தல புராணத்திலுள்ள தக்கனை தவம்புரிந்த சருக்கத்தால் அறியப்படும்.

25. பொன்னிக்கிறையோன் - சோழன். உறையூரில் அரசாட்சி செய்துகொண்டிருந்த வீரசேனனென்னும் சோழன் ஓரந்தணன் வீட்டிற் சிராத்தத்திற்கு வைத்திருந்த பழத்தை அதனை அறிந்தும் பசி மிகுதியால் வாங்கியுண்டான். அந்தப் பாவத்தால் ஒருவகைப் பிணியுற்று இத் தலத்திற்கு வந்து சிவசன்மரென்னும் அந்தண ரொருவர்பாற் பஞ்சாட்சர உபதேசம் பெற்றுச் சிவபெருமானை வழிபட்டுப் பிணியினின்றும் நீங்கப்பெற்றான். இவ் வரலாறு வீரசேனன் பிணிதீர்ந்த சருக்கத்தால் அறியலாகும்; "பழுதிற், பொருந்து பெரும்பிணிக்கோர் புற்றி னிடத்து, மருந்து தரவந்தான் வந்தான்", "கூருநோய்,ஆற்று மருந்தளிப்பான்", "புற்றிடத்து மண்மருந்தா லெப்பிணியும்,யோமருந்து மென்றான்" (111, 136, 182) என்பர் பின்னும்.

26. அகத்தியருக்குப் பஞ்சாட்சரத்தின் பொருளை உபதேசம் செய்தனர்; "ஆர வரைமுனிக்கோ ரஞ்செழுத்தி னுண்மைநிலை, தேர உரைத்த திறம்பாரீர்" 288.

27. காவேந்தன்-இந்திரன். மைந்தன்-சயந்தன். கொடியுருவம்-காக்கையுருவம். சயந்தன் காக்கையுருவெடுத்துச் சீதையைக் கொத்தியதனால் இராமராற் கோபிக்கப்பெற்று மீண்டும் வந்து அவரடியில் வீழ்ந்து அருள்பெற்றான். பெற்றும் பழைய காக்கைவடிவம் நீங்காமையால் மிகுந்த நாணத்தை யடைந்து இந்திரன் ஏவலால் இத்தலத்தை யடைந்து வழிபட்டு அவ்வடிவம் நீங்கினான்; இந்தத்தல புராணத்துள்ள சயந்தன் வினைதீர்ந்த சருக்கத்தால் இவ்வரலாறு அறியப்படும்.

28. ஞான நெறியுதவு நாகசுனைப் பாலிறந்த
கானவனை யாளுங் கருணையான்—ஈனமுற

29. ஆவி னுயிர்செகுத்த வந்தணன்றன் புன்னைநறும்
காவில் வழுத்தக் கதிகொடுத்தோன்—மேவுரிய

30. சங்கரர் சங்கரி தற்பரை யாவுடைத்தேன்
பங்கரர் வேதப் பழம்பொருளார்—செங்கமலப்

31. பாதனார் காதிற் பகரிருவர் சங்கீத
நாதனார் புன்னைவன நாதனார்—மூதரவில்

32. ஆடரியும் வேதாவு மன்றரியு மன்னமுமாய்
நாடரிய வன்மீக நாதனார்—நீடியபொன்

33. மாகம் பரவ மறைபரவச் சங்கபற்ப
நாகம் பரவவந்த நாதனார்—ஏகரெனும்

---

28. நாகசுனை மேற்கூறிய சங்கன், பத்மனென்னும் மகாநாக ரிருவரால் உண்டாக்கப்பட்ட சுனை; 138, 151 ஆங்கண்ணிகளைப் பார்க்க.

பசியினாற் சோர்வையடைந்த வேடனொருவன் நாகசுனையில் நீர்குடிக்க வந்து தவறி அதில் விழுந்து இறந்தான். அவன் ஒருநாள் இந்தத்தலத்தில் வசித்தமையாலும், நாகசுனை நீர் தீண்டப் பெற்றமையினாலும் முத்தியை யடைந்தான்; இவ்வரலாறு கானவன் வீடுபெற்ற சருக்கத்தால் அறியலாகும்.

29. கன்மாடனென்னும் அந்தணனொருவன் சமித்து, தருப்பை முதலியன கொண்டு வருகையில் தன்னை எதிர்த்து வருத்தவந்த பசுவைத்தள்ள அது சேற்றில் விழுந்து அதிற்புதைந்து இறந்தது. அந்தத் தீவினையாற் பற்றப்பட்ட அவன் இத்தலத்தை அடைந்து நாக சுனையில் நீராடிச் சங்கரலிங்கத்தை வழிபட்டு அப்பழியினின்றும் நீங்கிச் சிவசாரூபத்தை அடைந்தானென்பது கன்மாடச் சருக்கத்திலுள்ள கதை.

30. சங்கரர்: "சீராசைச் சங்கரனே" (246) என்பர்பின். ஆவுடைத்தேன் - ஆவுடை நாயகியைச்சேர்த்த; "ஆவுடைய செந்தேன்" (104.)பங்கு அரர்.

31. இருவர் - கம்பளர் அசுவதாருடைய. சங்கீத நாதனார் - இசையொலியைக் கேட்பவர்; நாதம்-ஒலி. மூதரவு-முதுமை அரவு.

32. ஆடு அரி-ஆடிய திருமால். அரியும் அன்னமும்-பன்றியும் அன்னப் பறவையும். வன்மீக நாதனார்-புற்றிடங் கொண்டார்; "புன்னைப் பொதும்பரின்கீழ்ப் புற்றா டினிதமர்ந்த,முன்னைப் பொருளான்" (162) என்பர்பின்.

32-3. பொன்மாகம் - தேவலோகம்.



34. நம்பரர் சங்கர நாரா யணராசை
அம்பரர் போற்றுமறை யாதியார்—கொம்பனைய

## சித்திரைத் திருவிழா.

35. முல்லை மகளிர் முலைக்கோடு பாய்ந்தழக்கும்
குல்லை யிடபக் கொடியேற்றி—வல்லை

36. ஒருமுகங் கொண்டுவம்மென் றும்பர்வர விட்ட
திருமுகமே யெங்கெங்குஞ் செல்ல—மருவிவந்து

37. மூவ ரிசைமுழங்க முப்பத்து முக்கோடி
தேவர் வணங்குந் திருநாளில்—பூவலயம்

38. வெம்பும் பிணிக்கு மெலியாது காணிக்கைச்
செம்பொன் குவிக்குந் திருநாளில்—தம்பையொடு

39. சித்திரைக் கங்கை யணியுஞ் செடாடவியான்
சித்திரைத் திங்கட் டிருநாளில்—நத்திச்

---

34. சங்கரநாராயணர்: "சங்கரநாரணனே" (கூழையந்தாதி. 56.) ஆசை அம்பரர்-திக்காகிய ஆடையை யுடையவர்; திகம்பரர்.

35. முல்லைமகளிர் - கோவியர்;முல்லை-முல்லைநிலம்.குல்லை-திருத்துழாய். இடபக்கொடி திருமாலாதலின் குல்லையிடபக் கொடியென்றார்; "அன்றெடுத்த கன்மாரிக் காக வருவிநெடுங், குன்றெடுத்த வென்றிக் கொடி" "அங்கமலத் தானை யளிக்குந் திருவுந்தித், துங்கவிடை யானை" "ஆவி யனைய பதினாறா யிரங்கொம்பு, மேவி வளரும் விடைக்கொடியும்" "சோரவிடைப் பாகன்" 98, 121, 264, 288 - 9.

37. மூவரிசை-திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் முதலிய மூவரது தேவாரம்; "தமிழ்மூவர் செஞ்சொல்" "மதுரம், பழுத்ததமிழ் மூவரிசைப் பாட்டும்" (55, 74);79-81, 278-9 ஆங்கண்ணிகளைப் பார்க்க.

38. தங்கள் தங்களுடைய பலவகையான பிணிகளைத் தீர்த்துக் கொள்வதற்கு வந்து பலவகையான காணிக்கைகளைத் திருமுன் செலுத்திவிட்டு அன்பர்கள் செல்வது இத்தலத்தில் நிகழும் தொன்றுதொட்ட வழக்கம்.

39. சித்திரை - சித்திரம்,ஆச்சரியம். சித் திரை கங்கை யெனப் பிரித்து அறிவுமயமாகிய கங்கை யெனலுமாம்; திரை-அலை. சித்திரைத்திங்கள்-சித்திரைமாதம்; சித்திரைமாதத்தில் இத்தலத்தில் விழா நடக்கும்; "தெண்ணிலா வேணி யார்க்குச் சித்[illegible]ளில், விண்ணவ ரிறைஞ்சியேத்த விழாவினை நடத்[illegible] விடுபடு சருக்கம், 33.

40. சிவந்தபதத் தாமரையைச் சேவித் துலகம்
உவந்ததிரு நாளி லொருநாள்—நிவந்திகலும்

41. எப்பகையு மில்லாத வென்னிறைமேல் வாளிதொட்ட
அப்பகையைத் தன்கிளையோன் றட்டதெனத்—துப்பின்

42. வெறிதரு மப்பகையின் வேழமெறிந் தென்னச்
செறிகதிரோன் வந்துதயஞ் செய்ய—நறியகுழல்

### திருப்பள்ளியெழுச்சி முதலியன.

43. வாய்ந்தமயி லாவுடைய வஞ்சியிளங் கொம்புடனே
தோய்ந்தமணப் பள்ளித் துயிலெழுந்து—சேர்ந்தததி

44. செய்யநறை நெய்யொடுபாற் றீங்கடலுண் கார்பவளத்
துய்யவரை பெய்வதெனச் சூழ்ந்தாட்ட—மையுலவு

45. விண்ணாறு றிழிந்து விரிசடைமேல் வீழ்ந்ததெனத்
தண்ணாறு திருமஞ் சனமாடி—நண்ணும்

46. இறைவியொடு மாகமத்தி னெல்லை கடவாக்
குறைவில் பெரும்பூசை கொண்டு—முறையிற்

---

40. நிவந்து - தலையெடுத்து.

41. என் இறை மேல் - என் தலைவராகிய சங்கரர்மேல். வாளி - அம்பை. அப்பகையை - அந்த மன்மதனை. தன் கிளையென்றது, நெற்றிக்கண்ணிலுள்ள நெருப்பை. துப்பின் - வன்மையையுடைய.

42. வெறி - மயக்கத்தை. அப் பகையின் வேழம் - மன்மதன் யானையாகிய இருளை. செறிகதிரோன் - சூரியன்.

41-2. நெற்றிக்கண்ணாகிய நெருப்பு மன்மதனை எரித்தமையின், அதன் இனமாகிய சூரியன் அவன் யானையாகிய இருளை அழித்தற்கு வந்தாற்போலத்தோன்றினு னென்பது கருத்து; முச்சுடருள் அக்கினியும் ஒன்றாதல் பற்றிக் கிளை யென்றார்.

43. இளங்கொம்பு - இளங்கிளை. மலர்கள் பரப்பிய பள்ளியாதலின் மணப்பள்ளி யென்றார். ததி - தயிர்.

44. நறை - தேன். தயிர் முதலிய நாற்கடல்களை யுண்ட மேகம் பவழ மலையின்மீது அவற்றைச் சொரிந்தாற்போல. அவற்றால் அன்பர்கள் திருமஞ்சனம் ஆட்ட. மை - மேகம்.

45. விண்ணாறு - ஆகாய கங்கை; எழுவாய்.

46. இறைவியொடும் - ஆவுடைநாயகியோடும். முறையில் - முறைமையில்லாத; முறையினை [illegible] மையினாலெனப் பொருள் கொள்ளவுமாம்.

# செய்தித் திரட்டு.

**இலட்சதீபம்:—** மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரர் திருக்கோயிலில் இம் மதி ௨௬௨ திருக்கார்த்திகைத் திருநாளில் வழக்கம்போல் இலட்சதீப மகோற்சவம் நடைபெறும். அதனைச் சிவநேசச் செல்வர்கள் தெரிசித் தின்புறவும், அதற்கும் அதன்பின் சாந்திமகாபிடேகத்திற்கும் அவரவர் தகுதிக்கியைய வருஷவாரி யுதவி புரியவும், தீபப்பணம், "அம்மன்சந்நிதி, அறுபத்து மூவர் குருபூசைமடத்தில், இலட்சதீப சுப. ராம. தெ. சுப்பிரமணியன் செட்டிமார்" பேருக்கு அனுப்பவும், அனுப்புகிறவர்கள் தங்கள் ஊர் விலாசம் பெயர்களைத் தமிழில் விவரமாக எழுதித் தெரிவித்து வீபூதிப் பிரசாதம் பெற்றுச் கொள்ளவும், நகரத்தார் திருமுகம் வழங்கி வேண்டிக் கொள்கின்றனர்.

**தனவணிகன்:—** இப் பெயருடன் இரங்கூனிலுள்ள பர்மா நாட்டுக் கோட்டைச் செட்டியார் சங்கத்திலிருந்து வாரப் பத்திரிகை விரைவில் வெளிவருமெனத் தெரிகிறது.

**சென்னை கார்ப்போரேஷன்:—** 2—11—32ல் செட்டிநாடு குமாரராஜா மு. அ. முத்தைய செட்டியாரவர்கள் கூட்டத்தாரின் முழு மனதுடன் இதன் தலைவராயினர்.

**நாட்டுக்கோட்டை நகரத்தார் விடுதி:—** பினாங்கு சைனாத்தெரு 24 இலக்க மாளிகையை, பினாங்கிலுள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வாங்கிப் புதுப்பித்து, ஐப்பசி ௨௫௨ காலை நாழிகை ௬-க்குமேல் ௭-க்குள் திறப்புவிழாச் செய்தனர்.

**ஜில்லாபோர்டு:—** இராமநாதபுரம் ஜில்லா போர்டுக்கு, தேவகோட்டை திருவாளர்களான.—குமாரஜமீந்தார் காளைராஜா அவர்கள், உ. ராம. உ. மு. சுப. இலக்குமணன் செட்டியார், வெ. ஆதி. ந. நடேசன் செட்டியார் ஆதியோர் அங்கத்தினர்கள் ஆயினர்.

**தாலுகாபோர்டு:—** திருவாடானைத் தாலுகா போர்டுக்குத் தேவகோட்டை திருவாளர்களான.—குமாரஜமீந்தார் அரு. காளைராஜா, வெ. சோமநாதன் செட்டியார், தி. அ. சு. அ. சுப்பிரமணியன் செட்டியார், ராம. அருணாசலம் செட்டியார், பழ. சித. சிதம்பரம் செட்டியார் முதலானவர்கள் அங்கத்தினர்கள் ஆயினர்.

**பரிமணங்குடி:—** ஸ்ரீ ஷண்முகநாத சுவாமி கோவிலில் ஐப்பசி ௧௨ கார்த்திகைநாள் ஆலயவழிபாடாற்றி சைவசன்மார்க்கசங்கத்தில் தமிழ்மறை முழங்க இன்னிசைக் கருவிகளுடன் திரு. மு. முத்துப்பிள்ளை யவர்களால் கந்த விரதமாதிய ஆத்திகப் பேருரையும், ௧௫௨ எம்பல் ஜெயலட்சுமி சோடாக்கம்பெனி திரு. நா. மு. முத்தையசெட்டியார் கந்தவிருத உபவாச விருந்து ௧௧௨ விசேட அபிடேக ஆராதனங்களும் ஸ்ரீபரமகுருசுவாமி குருபூஜையு முடித்து அடியவர்க் கமுதளித்து மாலை திரு. மு. முத்துப்பிள்ளை யாதியோரால் ஆத்திகப்பேருரையும் பிறவும் நடைபெற்றன.

# சிவநேசன்.

இப் பத்திரிகை ஒவ்வொரு தமிழ்மாத முதற்றிங்கட்கிழமைதோறும் மேன்மைமிக்க புலவர் பெருமக்களாலும் உண்மைப் பெரியோர்களாலும் வரையப்பெறும் சமயஉண்மை தமிழின் இனிமை சாதியவொழுக்கங்களின் நன்மையாதிய கட்டுரை பலவும் உலக நிகழ்ச்சிகளும் தன்னுட்கொண்டு வரும்.

## ஆண்டுத்தொகை விவரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ | 2 4 0 | அதற்கு மூலதனம் | ரூ | 30 0 0 |
| அயல்நாட்டிற்கு | ரூ | 3 0 0 | அதற்கு மூலதனம் | ரூ | 40 0 0 |

தனிப்பிரதி அணா 0 3 0

## விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4 0 0

நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8 0 0

## நிருப நேயர்கட்கு அறிவிப்பு.

க. நமது சிவநேசனுக்கு நிருபம் வரைவோர் நமது பத்திரிகைநேயராயிருத்தல்வேண்டும். உ. வரையும் விஷயங்கள், சமயசிந்தனை சாத்திரசிந்தனை, தெய்வசிந்தனை, ராஜசிந்தனை ஆதிய சிந்தனைகளில்லாமலும், எவரையுங் குறிப்பிட்டுத் தாக்காமலும், பொதுவாகவும் நன்மை பயப்பனவாகவு மிருத்தல் வேண்டும். ௩. பிழையின்றி நல்ல மையினால் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் எழுதல்வேண்டும். ௪. வருங் கடிதங்கள் கட்டுரைகளைப் பொருத்தமாகத் திருத்திப் பிரசுரிக்கவும், பொருத்தமில்லாதவைகளைப் பிரசுரியாதுவிடவும் கூடும். ௫. பிரசுரிக்கப்படாத கடிதங்கள் கட்டுரைகள் திருப்பி யனுப்பப் படமாட்டா. ௬. கடிதக்காரர்களின் அபிப்பிராயங்கட்குக் கடிதக்காரர்களே பொறுப்பாளிகளாவர்.

## சிவநேசன் அச்சுக்கூடம்.

இவ் அச்சுக்கூடத்தில் நன்முகூர்த்தப் பத்திரிகை முதலிய எல்லாவித அச்சு வேலைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் நயமாக அவரவர்மனதிற்குகந்த வண்ணம் குறித்த காலத்தில் அச்சியற்றித் தருகின்றோம். அவைகட்குக் காகிதங்கள் அனைத்தும் எங்களிடத்து உள்ளன.

அமைச்சர்.